**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**

# ஆண்டறிக்கை 2017

***உன்னதத்திற்கான நிலையம்***


**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**
**எம். டி. எச் ஜயவர்த்தன மாவத்தை**
**அத்துருகிரிய**

**தொ. பே: 011-2770232 –தொலைநகல். : 4547644**
**மின்னஞ்சல்:nipm@sltnet.lk/nipd@sltnet.lk**

**இணையத்தளம் :www.nipm.gov.lk**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நோக்கும் பணியும் | 3 |
| தவிசாளரின் செய்தி | 4 |
| பணிப்பாளரின் ∴ பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு | 5-6 |
| நிறுவன தாபனமும் குறிக்கோள்களும் | 7-8 |
| ஆளுநர்கள் சபையின் அறிக்கை | 8 - 9 |
| சபை ஆளுநர்கள் உள்ளடக்கம் | 9 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை | 9 - 11 |
| நிறுவனத்தின் பதவியினர் | 11 - 14 |
| நிருவாக மீளாய்வு | 15 |
| நிறுவனக் கட்டமைப்பு | 16 |
| நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடுகள் | 17 - 19 |
| பயிற்சி முன்னேற்றங்கள் | 19 - 28 |
| அங்கத்துவம் | 29 |
| வெளியீடுகள் | 29 - 30 |
| வளாகத்தினுள் கிடைக்கப்பெறும் வசதிகள் | 30 - 31 |
| எமது செய்பாடுகள் | 32- 35 |
| நிதியியல் மீளாய்வு | 35- 41 |
| நிறுவனத்தினால் எதிர்கொள்ளப்பட்ட தடைகள் | 41- 42 |
| முடிவுரை | 40 -43 |

# தொலைநோக்கு

பெருந்தோட்ட முகாமைத்துவப் பயிற்சி வழங்குவதிலும் உசாத்துணைவு வழங்குவதிலும் ஆராய்ச்சி நடாத்துவதிலும் அதிசிறந்த நிலையமாக திகழ்தல்

# பணி

தரம் வாய்ந்த பயிற்சி ஊடாக முழுநிறைவினை நோக்கி பெருந்தோட்டக் கைதொழிலில் காணப்படும் அனைத்து மானிடச் சொத்துக்களினதும் தொழில்சார் ஆற்றலினை அதிகரித்தல்

## தலைவரின் செய்தி



2017ம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு செய்தியினை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கல்விச் செயற்பாடு தேசிய ரீதியிலான அதன் தோற்றப்பட்டினை உள்மனநிறைவுடன் பேணியது. இது, நாம் நடாத்துகின்ற கற்கை நெறிகளிலும் அவற்றுக்காக எமக்கு கிடைக்கப்பெற்ற கருத்துரைகளிலும் அரசாங்க மற்றும் தனியார் அக்கறைதாரர்களைக் கவருவதில் உள்ள வெற்றியிலும் அத்துடன் எமது கல்விசார் ஊழியர்களின் பங்களிப்பினைப் பாராட்டி பல விருதுகள் கிடைக்கப்பெற்றதிலும் பிரதிபலித்துள்ளது. தேசிய ரீதியாகவும் உலகளவிலும் வலுவான கல்விப் போட்டியாளர் ஒருவராக தொடர்ந்தும் திகழும் பொருட்டு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது தேசிய ரீதியாக மற்றும் உலகளவிலான கல்வித் துறையில் அதன் வளர்ந்து வரும் சவால்களை எதிர்பார்ப்பதுடன் அதற்கு எதிர்வினையளிக்க வேண்டிய அதேவேளை எமது ஆராய்ச்சிக் கொள்ளளவு, கற்பித்தல் நுட்பங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்து அதன் நற்பெயரை ஊக்குவித்தல் வேண்டும். தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது அதிகளவிலான கல்விசார் ஊழியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களில் முதலிடுவதுடன் அதன் தாக்கத்தினை உச்சப்படுத்தக்கூடிய விடயங்களில் கொள்ளளவு அபிவிருத்தி மற்றும் மனோபாவ விருத்தி போன்றவற்றுக்கான மூலோபாய ஆதரவு மீது கவனம் செலுத்துகின்றது. நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பல்வேறு கற்கை நெறிகளுக்காக 13000 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை அடைகின்ற அதன் இலக்கை எய்துவதை நோக்கி 2017ஆம் ஆண்டில் அது முக்கிய உபாயங்களை முன்னெடுத்தது. நிறுவனசார் கல்வி மற்றும் கற்பித்தல் கொள்ளளவிற்கு ஆதரவளிப்பதற்கும் அவற்றை அதிகரிப்பதற்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது தொழிற்றுறை நிலைத்திருத்தல் தன்மை மீது மனித வளங்களையும் பௌதீக வளங்களையும் விருத்தி செய்வதற்கு திட்மிடுகின்ற அதேவேளை தொழிற்றுறையில் பணியாற்றுகின்றவர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் அதிகரிக்கும் நோக்குடன் 3 பட்டப்படிப்பு கற்கை நெறிகளை உருவாக்குகின்றது.

முடிவுரையாக இந்நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்காக அதிகளவிலான ஆதரவினை வழங்கியமைக்காக கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளர்களுக்கும் அவரது ஊழியர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். மிகவும் அர்ப்பணித்தமைக்காக நிறுவனத்தின் பணிப்பாளருக்கும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன குடும்ப உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

**ஒப்பம்**
**தீப்தி அசோக்க அபேவிக்கிரம**
**தவிசாளர்/ தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**
**2018.03.27**

## பணிப்பாளரின் மீளாய்வு.்.பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு



தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ துறையில் எப்போதும் வளர்ச்சியடைந்துவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பெருந்தோட்டத் துறையில் திறமைகளை வெளிக்காட்டுகின்றவர்களை பயிற்றுவிக்கும் நோக்குடன் பெருந்தோட்ட முகாமைத்து நிறுவனத்தின் நாமம் 1979 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. அப்போதிருந்த மிகச் சிறந்த முகாமையாளர்கள், கண்காணிப்பாளர்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் அறிவியலார்களை உற்பத்தி செய்வதில் தனித்துவமிக்க பதிவுவொன்றினை கொண்டு விளங்ககின்றது.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவத்துவ நிறுவனத்தில் தமது தொழில்சார் வாழ்வில் உயர்நிலையினை அடைவதற்கு வளமூட்டுகின்ற மற்றும் வாழ்வில் திருப்பத்தினை ஏற்படுத்துகின்ற அனுபவத்தினை எமது மாணவர்கள் கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர். தற்போதய முன்னேற்றங்களுக்கு இசைவாக மாத்திரமின்றி தமது நிபுணத்தவ துறையில் அறிவினை விருத்தி செய்வதற்கும் பங்களிப்பதற்கும் தம்மை ஏற்படுத்துகின்ற நிறுவனத்தின் ஊடாக பல்வேறு கற்கைநெறிகள், இணைப்பாடவிதான மற்றும் மேலதிக பாடவிதானச் செயற்பாடுகள் ஊடாக எமது மாணவர்களின் திறமைகளை தீட்டுவதனையும் அறிவுத்தளத்தினை அதிகரிப்பதனையும் நாம் பேணிவளர்க்கின்றோம். இதனை வசதிப்படுத்தவதற்காக எமது மகுடவாசகமான ''உன்னதத்திற்கான நிலையம்'' பயிர்ச்செய்கையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் குறிப்பான ஆரயச்சி மற்றும் பயிற்சியனை அதிகரிப்பதற்கு பங்களிக்கின்றது. தேவைக்கு உகந்த மற்றும் தொழில்சார் சூழலுடன் எமது நிறுவனமானது தரமான கற்பித்தல், கருத்தரங்குகள், மாநாடுகள், ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு மாநாடுகள் போன்றன ஊடாக கல்வி உலகுக்கு கணிசமான பங்களிப்பினை வழங்குன்றது.

### நிதியாண்டின் சிறப்புக்கூறுகள்

எதிர்காலத்திற்கு தலைமைதாங்கிச் செல்கின்ற சாத்தியமான பயிர் செய்கையாளர்களின் வலுவான தொடர்பினை கட்டியெழுப்புவதற்காக எமது நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதற்கு நாடு பூராகவும் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள், சிறு உடமையாளர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஏனைய பங்குதாரர்களுடன் நாம் தொடர்ந்தும் பணியாற்றுகின்றோம். அதற்கமைய, அனைத்து மாவட்டங்களிலும் 261 நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேல் நடாத்தி இந் நிறுவனத்தின் நலன்களை கணக்கிடுவதற்கு 13558 மாணவர்களுக்கும் சிறு உடமையாளர்களுக்கும் சேவை வழங்கியுள்ளோம்.

2017ம் ஆண்டில் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றிய சிறப்புக் கூறானது 33 கல்விசார் மற்றும் தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி இதில் அனைத்து நடுகை மாவட்டங்களிலும் இருந்து 920 மேற்பட்ட பங்கேற்பாளர்கள் சமூகமளித்தனர். 2017 ஆம் ஆண்டில் முக்கியமாக ரூபா 9.0 மில்லியன் ஒதுக்கீட்டில் சிறு உடமையாளர்கள் துறைக்காக 126 கொள்ளவு அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களை நிறுவனம் திட்டமிட்டு 228 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதில் நிகரற்ற சாதனையொன்றினை நிறுவனம் காண்பித்தது என்பதனை குறிப்பிடுவது மகிழ்ச்சியளிக்கின்றது. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மீது ரூபா 9.62 மில்லியன் அறிக்கையிட்டதுடன் உலக மற்றும் உள்நாட்டில் தொழில்துறை பின்னடைவுக்கு மத்தியில் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட அனைத்து பயிற்சி செயற்பாடுகளில் இருந்து மொத்த வருமானமாக 15.85 தொகையினை அறிக்கையிட்டது.

### தொழில்துறைக்கான எமது பங்களிப்பு

தேசிய பெருந்தோட்ட முகாமைத்தவ நிறுவனத்தில் நாம் பெறுபேறுகளை இலக்காக கொண்ட தீர்க்கமான, நெகிழ்வுமிக்க, வினைத்திறன்மிக்க, புதுமைபடைக்கும் மற்றும் ஒழுக்கமிக்க நடுகை முகாமையாளர்களை வேண்டுகின்ற பயிற்சி சூழலை நாம் புரிந்து கொள்கின்றோம். பெருந்தோட்டத் துறைக்கு அமைவாக பெரும்பாலனோருக்கு முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் தரம்வாய்நத தொழில்சார்.். கல்விசார் கற்கைகளை செலவுச் சிக்கனமாகவும் வசதியாகவும் வழங்குவதற்கு நிறுவனம் அர்ப்பணித்துள்ளது. பொறுப்புமிக்கவர்களாகின்ற அதேவேளை தொழில்துறை நிலைபெறுதன்மைக்கு விரைவான மற்றும் துரிதமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் துறையில் சுற்றாடல் மற்றும் சமூக ஐக்கியத்தினை பேணுவதற்கும் அவர்களுக்கு உதவுகின்ற மனித விழுமியங்கள் மற்றும் தொழில்சார் ஒழுக்கங்கங்களை மாணவர்கள் மத்தியில் நாம் பேணி வளர்க்கின்றோம். தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது புதுமைபடைக்கும் மற்றும் தனித்துமிக்க கற்பித்தல் கோட்பாடுகளை பயன்படுத்தி அர்ப்பணிப்பின், கடமைப்பொறுப்பின் மற்றும் ஆழ்ந்த அறிவுமிக்க அத்திவாரத்தின் மீதிருந்து அதிநவீன, விரைவான வழியில், நெகிழ்வுமிக்க, உயர் விசேடத்துவம் பெற்ற, பொருளாதார பின்னடைவற்ற தொழில்நோக்காக கொண்ட முகாமைத்தவ கற்கைநெறிகளை வழங்குகின்றது.

### எமது வலையமைப்பு வலிமை

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது பயிர்செய்கையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் அத்துடன் விரிவாக்க தொழிற்பாடுகளுக்கும் பிந்திய தொழிநுட்பம், அறிவு மற்றும் தொடர்புடைய திறன்களை பரவச்

செய்வதில் நாட்டிலுள்ள அனைத்து ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் மற்றும் பொது நிறுவனங்களுடனான விரிவாக்க சேவையின் வலுவானதும் செயல்திறன் மிக்கதுமான வலயமைப்பு ஒன்றினை கொண்டுள்ளது. இப் பிரிவுகள் நோய் கண்டுபிடிப்பதற்கான வெளிக்கள விஜயங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், செய்துகாட்டல்கள், குழுக் கலந்துரையாடல் மற்றும் கள நாட்களை ஏற்பாடு செய்தல் போன்றவற்றினை பொறுப்பேற்று விவசாயிகளுக்கும் பிராந்திய பெருந்தோட்ட கூட்டுத்தாபனங்களுக்குமான தொழிநுட்பங்கள் பற்றிய மதிப்பீடு மற்றும் சீராக்கம், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் போன்ற முக்கிய கடமைகளை செயலாற்றியது. தொழிற்துறை முன்னேற்றங்கள் மீது நடுகை சமூகத்தினை விழிப்படையச் செய்வதற்கு இவை மிக முக்கியத்துவமிக்க காரணிகளாகும்.

**நிறுவனசார் நிலைபெறுதன்மைக்கான புதிய உபாயங்களை உருவாக்குதல்.**

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது 2020 அளவில் துறைக்கு இணைக்கப்பட்டுள்ள மனித வளங்களின் திறன்களையும் கொள்ளளவினையும் தரமுயத்தும் நோக்கத்துடன் பெருந்தோட்ட கைத்தொழிலுக்கான தேசிய தொழிற்தகமைகளை உருவாக்குவதில் மூன்று பட்டப்படிப்பு கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடுகின்றது. தொழில்துறையின் நிலைதிருத்தல் தன்மைக்காக ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் இன்றியமையாத பங்கொன்றினை ஆற்றும் இது சுயாதீனமாக பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக எமது அடுத்த நடுத்தரகால திட்டங்களினுள் முன்னுரிமை அளிப்பதற்கு நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

அடுத்துவரும் நான்கு ஆண்டுகளுக்காக நிறுவனம் ஒன்றாக நாம் அடையவேண்டியவை பற்றிய பொது நோக்கொன்றினை உபாய இலக்குகள் 2017-2020 உருவாக்கியுள்ளது. அவை:

- **உபாய இலக்கு 1** : துறைக்கு தரமிக்க சேவையினை வழங்கும் பொருட்டு நிறுவனத்தின் கல்விசார் பீடத்தினை வலுப்படுத்தலும், மனித வளங்களை அபிவிருத்தி செய்தலும்.
- **உபாய இலக்கு 2** : எமது நிபுணத்துவ மைய விடையப் பரப்பில் உயர்தாக்க கல்வி தீர்வுகளுடன் தலைசிறந்த நற்பெயரினை விரிவடையச் செய்கின்ற அதேவேளை சந்தைப்படுத்தலினையும் ஊக்குவித்தலினையும் வலுவூட்டல்.
- **உபாய இலக்கு 3** : தரம் வாய்ந்த முகாமைத்துவத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளையும் உகந்த சுற்றாடலையும் உருவாக்குதல்.

**முடிவுரைக் குறிப்பு**

இறுதியாக, எமது வளர்ச்சியில் புதுமைபடைத்தலினதும் பங்களிப்பினதும் எமது எண்ணத்தினை தக்கவைப்பதற்கும் அதிகரிப்பதற்கும் அத்துடன் விடயங்களை மேற்கொள்வதற்கும் ஆட்கள் வலுவுள்ளவர்களான உணருகின்ற உற்சாகமான சூழல் ஒன்றினை பேணுவதற்கும் சவால்களை எதிர்கொள்வதற்கும் நிறுவனத்திற்கு பங்களிப்புச் செய்வதன் மீது புதுமை படைத்தல், சுயாதீன மதிப்பீடு போன்றவற்றுக்கும் புதிய வழிகளையும் வழிமுறைகளும் எமக்குத் தேவை என்பதனை நான் குறிப்பிட விரும்புகின்றேன். முடிவாக, பெருந்தோட்ட கைத்தொழில் கௌரவ அமைச்சர் நவீன் திசாநாயக்க மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் ஆகியோரிடமிருந்து இருந்து கிடைக்கப்பெற்ற தலைமைத்துவம், வழிகாட்டலின் பிரதான காரணமாக நிறுவனம் முன்நோக்கிச் செல்ல முடிந்தது. ஆண்டினை வெற்றி கொள்வதற்கு தமது மிகுந்த ஆதரவிற்காக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் குடும்ப உறுப்பினர்களுக்கும் நிறுவனத்தின் தலைவருக்கும் விசேட நன்றிகளை கூறுகின்றேன்.

ஒப்பம்
**கலாநிதி பிராத் தர்மசேன**
**பணிப்பாளர்.̇.பிரதம நிறைவேற்று அதிகாரி**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்தவ நிறுவனம்**

2018.03.27

**நிறுவன தாபனமும் குறிக்கோள்களும்**



தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினை மிகவும் செயல்திறன்மிக்கதாகவும் அரசாங்கத்தின் உறுதியான நியதிச் சட்ட நிறுவனமாகவும் ஆக்கும் பொருட்டும் 1981 இன் 76ஆம் இலக்க சட்டம், 1987 இன் 5ஆம் இலக்க சட்டம் மற்றும் 2003 இன் 38ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்ட 1979 இன் 45ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ சட்டத்தினால் 1979 ஜூலையில் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் தாபிக்கப்பட்டது. நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் எம். டி. எச் ஜயவர்த்தன மாவத்தை அத்துருகிரிய என்ற இடத்தில் அமைந்துள்ளது.

இச்சட்டங்களுக்கு அமைவாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது 3 பிரதான பகுதிகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கல்விசார் கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வோருக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கும் பெருந்தோட்ட நிறைவேற்று தகைமையுடைய அலுவலர்களுக்கு தொழில்சார் உரிப்புரிமையினை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒரேயொரு அரசாங்க நிறுவனமாகும். சிறு உடமையாளர் துறை உள்ளடங்கலாக பெருந்தோட்டக் கைத்தொழிலில் பணியாற்றுகின்றவர்களின் தொழில்சார் தகைமைகளின் உயர் தரநியமத்தினை பேணுவதனை இது உறுதி செய்கின்றது.

இக்குறிக்கோள்களை அடைவதற்காக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது பல்வேறு கருத்தரங்குகள், செயலமர்வுகள், பரீட்சைகள் என்பவற்றை நடாத்துவதுடன் அரசாங்க, தனியார் நிறுவனங்களுக்கும் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது. வெளிநாட்டு மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான கொள்ளளவினையும் இது கொண்டுள்ளது.

**குறிக்கோள்கள்:**

சட்டத்திலும் திருத்தப்பட்ட சட்டங்களிலும் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் பின்வருமாறு

I. இலங்கையிலும் வெளிநாட்டிலும் பெருந்தோட்டத்துறையில் பணியாற்றுகின்ற அனைத்து வகையான ஊழியர்களுக்கும் பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட வேண்டப்பட்ட பயிற்சிகளை சுயமாகவும், வேறு நிறுவனங்களின் கூட்டிணைப்புடனும் வழங்குதல்.

II. பெருந்தோட்டத் துறையில் உள்ள ஊழியர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் கிரமமான, புத்துணர்வளிக்கும் மற்றும் சேவையில் பயிற்சி கற்கை நெறிகளை வழங்குதல்.

III. பெருந்தோட்டக் கைத்தொழிலில் பணியாற்றுகின்ற அரசாங்க மற்றும் தனியார் துறை ஆளணியினருக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் பயிற்சி நெறிகளை வழங்குதல்.

IV. தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் வேறு தொடர்புபட்ட நிறுவனங்களுடன் போன்றவற்றுடன் இணைந்து, டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் பொருத்தமானதாயின் டிப்ளோமா வழங்குதல்.

V. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி தொடர்புடைய கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் சமவாயங்களுக்கு அனுசரணை வழங்குதலும் நடாத்துதலும்.

VI. வேறு இதையொத்த நிறுவனங்களில் ஏற்கனவே செய்யப்படாத பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர்கள் உறவுகள் என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் ஆராய்ச்சியினை மேற்கொள்ளல்.

VII. பெருந்தோட்டக் கைத்தொழிலில் மனிதவலு தேவை தொடர்பில் பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கு அவசியமான நுண்ணறிவினைக் கொண்டுள்ளவர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் பயிற்சி நெறிகளை வழங்குதல்.

VIII. ஏதேனும் அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அல்லது பெருந்தோட்டக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியில் காணப்படும் வேறு நிறுவனங்கள் போன்றவற்றுக்கு முகாமைத்துவ, தொழில்நுட்ப மற்றும் நிருவாக ஆலோசனை அத்துடன் சேவைகளை வழங்குதல்.

**ஆளுநர்கள் சபை அறிக்கை**

2017ஆம் ஆண்டின்போது பின்வருவனவற்றையும் ஆளுநர்கள் பொறுப்பாகவுள்ளவற்றையும் மேற்பார்வை செய்வதற்காக அதுருகிரியவில் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தில் ஆளுநர் சபையின் 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

- நிறுவனச் செயற்பாடுகளின் அனைத்து தொழிற்பாடுகளிலும் உயர்மட்ட இணங்குவித்தல் கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதனை உறுதி செய்தல்
- அனைத்து பயிற்சி செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளிலும் வெளிப்படைத் தன்மையினைத் தோற்றுவிக்கின்ற உயர் தரநியமமிக்க வெளிப்படுத்தல்கள் பேணப்படுகின்றது என்பதனை உறுதி செய்தல்
- நிறுவனத்தின் அக்கறைதாரர்களுக்காக மிகவும் விரும்பப்படும் சிறந்த பெறுபேறுகளை கொண்டுவருவதற்காக நிறுவனத்தின் வளங்களை செயற்றிறன் மிக்கவாறும் வினைதிறன் மிக்கவாறும் நெறிப்படுத்தல்
- நிறுவனத்தின் நடுத்தர மற்றும் நீண்டகால உபாயம், வருடாந்த வரவு செலவுத் திட்டங்கள், நடவடிக்கைத் திட்டம் மற்றும் முக்கிய நிதியியல் அத்துடன் தொழிற்பாட்டு கொள்கைகளின் அனுமதிட்டாக பணிப்புரைகளை வழங்குதல்

1981இன் 76ஆம் இலக்கச்சட்டம், 1987இன் 5ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2003இன் 38ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1979இன் 45ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன சட்டத்தின் 6ஆம் பிரிவின் நியதிகளின் படி 2017ஆம் ஆண்டின் போது சபை ஆளுநர்களாக பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது.

**ஆளுகை உறுப்பினர்களின் தொகுப்பு**

| சபை உறுப்பினர்களின் பெயர் | பதவி | சபை உறுப்பினர்களின் பெயர் | பதவி |
|---|---|---|---|
| **திரு. தீப்தி அசோக்க அபேவிக்கிரம தவிசாளர்.∴. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்** | உறுப்பினர் | **திரு. மாலின் குணதிலக** செயலாளர் நாயகம் இலங்கை நடுகையாளர்கள் அமைப்பு | உறுப்பினர் |
| **கலாநிதி பிரசாத் தர்மசேன பணிப்பாளர் ∴. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்** | உறுப்பினர் | **திரு. இந்திக பிரேமரத்ன** பணிப்பாளர் நிதி திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | உறுப்பினர் |
| **கலாநிதி.டப்.எம்.ஜீ. செனவிரத்ன பணிப்பாளர்.∴. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்** | உறுப்பினர் | **திரு.டைட்டஸ் சுனில் சில்வா** தலைவர், துருசவிய நிதியம் | உறுப்பினர் |
| **கலாநிதி.ஐ.எஸ்.பீ. அபேசிங்க பணிப்பாளர், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்** | உறுப்பினர் | **திரு.எம்.எம்.டீ. திலகரட்ண** பிரதிநிதி, தொழிற்சங்கம் | உறுப்பினர் |
| **கலாநிதி. எல்.சீ.பி. பர்னாந்து பணிப்பாளர், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்** | உறுப்பினர் | **திரு.என்.எம்.ஆர். ஜயதிலக** பிரதிநிதி இலங்கை தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்திச் சம்மேளனம் | உறுப்பினர் |
| **திருவதி. குமாரி சோமரத்ன மேலதிகச் செயலாளர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு** | உறுப்பினர் | **திரு. சந்தன ஜயசேகர** பிரதிநிதி, தேயிலை தொழிற்சாலைகள் உரிமையாளர்கள் அமைப்பு | உறுப்பினர் |
| **திரு. டி ஜி. மஹிபால பொது முகாமையளர், தேயிவை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகார சபை** | உறுப்பினர் | **திரு.அர்ஜுன் தெரனியகல** பிரதிநிதிஇ ஊபுயுளுடு | உறுப்பினர் |
| **திரு.குமார வீரசூரிய பிரதிநிதி, தொழிற்சங்கம்** | உறுப்பினர் | | |

- பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) திருமதி கே என். குமார் சோமரத்ன 2017 ஆககஸ்ட் முதல் சபையில் இருந்து விலகினார்.
- தேயிலை தொழிற்சாலை அமைப்பின் பிரதிநிதியாக திரு. சந்தன ஜயசேகர சார்பில் 2017 நவம்பர் தொடக்கம் திரு. இசுறு தெரிவு செய்யப்பட்டார்.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிக்கை

நிதி திட்டமிடல் அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு இணங்க நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டுள்ளதுடன் பின்வருவனவற்றை மேற்பார்வை செய்வதற்காக பணிப்பாளர் சபையினால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் நிதியியல் அறிக்கையிடல்
- நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டினை உறுதி செய்தல்

- கணக்காய்வு வினவல் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளுடன் தொடர்புபட்ட கருமங்களும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பதில்களுக்கான பரிந்துரையும்
- பெறுகைக் குழுவின் தீர்மானங்களை மீளாய்தலும் மூலதன மற்றும் மீண்டெழும் செலவின பயன்பாட்டினை மீளாய்தலும்.
- வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளும் உண்மைச் செயலாற்றுகை பற்றிய முன்னேற்றமும்.
- மேலதிக நேரம், எரிபொருள், தொலைபேசி மற்றும் மின்சாரம் போன்றவற்றுடன் தொடர்புடைய செலவினத்தினை வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடுதல்.
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் அவற்றின் செயற்பாடுகளில் ஏற்பட்ட செலவினம்
- நிறுவனத்துடன் தொடர்புடைய ஏயை நிதியியல் செயற்பாடுகள்

2017 இல்கணக்காய்வு குழுவானது 2016இற்காக 2016 ஜனவரி 11, மார்ச் 14, ஜுன் 03 மற்றும் ஒக்டேபர் 25 ஆகிய தினங்களில் நான்கு கூட்டங்களை நடாத்தியது.

## <u>உள்ளக கணக்காய்வு</u>

மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் மார்ச் மாதத்தில் நிறுவனம், அதன் நிரந்தர பதவியணிக்காக உள்ளக கணக்காய்வு தொழிற்பாடு அப்போதிருந்து செயலாற்றப்பட்டது.

| உறுப்பினரின் பெயர் | பதவி | உறுப்பினரின் பெயர் | பதவி |
|---|---|---|---|
| **திரு. இந்திக பிரேமரத்ன பணிப்பாளர் நிதி திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்** | தலைவர் | **கலாநிதி பிரசாத் தர்மசேன** பணிப்பாளர்/தே.பெ.மு.நி | பதவியினர் உறுப்பினர் |
| **திருவதி.குமாரி சோமரத்ன மேலதிகச் செயலாளர்,பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு** | உறுப்பினர் | **திரு. எல் டி ஜே பிரியந்த** கணக்காளர்/தே.பெ.மு.நி | பதவியினர் உறுப்பினர் |
| **கலாநிதி. எல்.சீ.பி.பர்னாந்து பணிப்பாளர்,தெங்கு ஆராய்ச்சி நிறுவனம** | உறுப்பினர் | **திரு. கே.எச் யூ. பி விஜேவீர** உள்ளக கணக்காய்வாளர்/தே.பெ. மு.நி | செயலாளர்/க மு குழு |
| **திரு. ஜயந்த புஸ்பகுமார கண்காணிப்பளர், கணக்காய்வுத் திணைக்களம்** | அவதானிப் பு உறுப்பினர் | **திருவதி சீ எ மஜினா** உதவிப் பணிப்பாளர்/ தே.பெ.மு.நி | செயலாளர்/க மு குழு |

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு நிதி திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதி திரு. இந்திக பிரேமரத்ன தலைமை வகித்தார். பின்வரும் நிறைவேற்றுத் தரமல்லாத நிறைவற்றுப் பணிப்பாளர்கள் 2016ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் பணியாற்றினர்.

- பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) திருமதி. குமாரி சோமரத்ன 2017 தொடக்கம் அமைச்சிலிருந்து அவரது இடமாற்றம் காரணமாக குழுவிலிருந்து விலகினார்.
- தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) திருமதி சீ.எ. மஜினா ஆராச்சி 2017.10.20 தொடக்கம் பதவி விலகினார்

## நிறுவனத்தின் பதவியினர்

கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் ஆவார். அவரின் தலைமையின் கீழ் 2017 இன் இறுதியின் போது நிரந்தரமாக மொத்தமாக 59 ஊழியர்கள் இருந்தனர். நிறுவனமானது பயிற்சி, நிருவாகம் மற்றும் நிதி என்ற மூன்று முக்கியமான தொழிற்பாடுகளின் கீழ் இயங்குகின்றது.

**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்**

தலைவரும் / பிரதம நிறைவேற்று அலுவலர் இருவரும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற நிறைவேற்றுத் தர பணிப்பாளர்கள் ஆவர். தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோருக்கிடையிலான பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களின் தெளிவான வேறுபாடு சமநிலையான அதிகாரத்தினை உறுதிசெய்கின்றது.



திரு. தீப்தி அபேவிக்கிரம,
தலைவர்



கலாநிதி.கே.எச்.ஜீ.எம்.பிரசாத் தர்மசேன
பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர்

**முகாமைத்துவ பதவியினர்**

நடுத்தர முகாமைத்துவ பதவிகளில் சேவையாற்றுகின்ற முக்கிய ஊழியர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.



திருமதி. எஸ்.என் இலங்கன்திலக
பிரதானி- பயிற்சி



திரு. எல்.டீ.ஜே.பிரியந்
கணக்காளர்



செல்வி. சி.டீ. மகினா
ஆராய்ச்சிஉதவிப்



பி.எச்.ஜயதிலக
பயிற்சி விசேட நிபுணர்
(கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்)



திருமதி.ஆர்.என்.லொக்குஹெட்டி
பயிற்சி விசேட நிபுணர் (முகாமைத்துவம்)

## ஏனைய நிறைவேற்றுத் தர அலுவலர்கள்



திரு. சீ டி பதிநாயக்க, பயிற்சி விசேட நிபுணர் (விவசாயப் பொருளியல்)



திரு. சீ டி பதிநாயக்க, பயிற்சி விசேட நிபுணர் (விவசாயப் பொருளியல்)



திரு.எம்.எல்.ஆர்.ஜயந்த, நிருவாக உத்தியோகத்தர



திரு.என்.டீ.எஸ்.பீ.தென்னக்கோன் விடுதி முகாமையாளர்- அத்துருகிரிய



**திரு எம் பி எம் ஏ எல் பண்டாரநாயக**
விடுதி முகாமையாளர் அத்துருகிரிய



**திரு. பீ. டப். ஜி. என். சீ வீரகோன்**
பயிற்சி அலுவலர் (முகாமைத்துவம்)



**திரு எல் எஸ் லியனகே**
பயிற்சி அலுவலர்
(கணி, நிதி முகாமைத்துவம்)



**திருமதி இந்ராணி ஜயசூரிய**
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
(பரீட்கைகளும் உருங்கிணைப்பும், முகாமைத்துவம்)



திரு.கே.ஜீ.நேபாள
பதவியினர் உதவியாளர்
(பயிற்சி)

## பயிற்சிப் பிரிவு (மொத்த அலுவலர்கள் - 18)

| | |
|---|---|
| பயிற்சி விசேட நிபுணர் (விவசாயப் பொருளியல்) | 01 |
| பயிற்சி விசேட நிபுணர் (முகாமைத்துவம்) | 01 |
| பயிற்சி விசேட நிபுணர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) | 01 |
| பயிற்சி அலுவலர் (விவசாயப் பொருளியல்) 01 | |
| பயிற்சி அலுவலர் முகாமைத்துவம் | 01 |
| பயிற்சி அலுவலர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) | 01 |
| நிகழ்ச்சித்திட்ட அலுவலர்( பரீட்கைகளும் உருங்கிணைப்பும்) | 01 |
| பதவியினர் உதவியாளர் (பயிற்சி) | 01 |
| நூலகர் | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 07 |
| கட்புல செவிப்புல உதவியாளர் | 01 |
| அலுவலக உதவியாளர் | 02 |

## நிருவாகப் பிரிவு (மொத்த அலுவலர்கள் - 31)

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| விடுதி முகாமையாளர் | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 |
| பெறுகை உதவியாளர் | 01 |
| சாரதி | 07 |
| தோட்ட உதவியாளர்கள் | 03 |
| அலுவலக உதவியாளர் | 03 |
| விடுதி உதவியாளர்கள் | 03 |
| அச்சு உதவியாளர் | 01 |
| சுகாதார உதவியாளர் | 01 |

## நிதிப்பிரிவு (மொத்த அலுவலர்கள் - 9)

| | |
|---|---|
| கணக்காளர் | 01 |
| கணக்கு உதவியாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 06 |
| அலுவலக உதவியாளர் | 01 |

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு (மொத்த அலுவலர்கள் - 1)

உள்ளக கணக்காய்வாளர் 01

**நிருவாக மீளாய்வு**

நிருவாகப் பிரதானி உதவிப் பணிப்பாளர் (நிருவகம்) ஆவார். இவர் நிறுவனத்தின் பொது நிருவாகத்திற்கு பொறுப்புடையவர் ஆவார். ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், மனித வள பதவி உயர்வுகள் போன்ற அனைத்து ஊழியர்கள் கருமங்களும் நிருவாக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டடங்களை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் உள்ளடங்கலாக நிறுவனத்திற்கான அனைத்துப் பொருட்களினதும் கொள்வனவு நிருவாகப் பிரிவினால் பணிக்கப்படுகின்றது. 2017ஆம் ஆண்டின் போது, அனுமதிக்கப்பட்ட பதவியணியிலுள்ள வெற்றிடமாகவுள்ள அலுவலர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யக்கூடியதாகவிருந்தது.

வெளிநிறுவனங்களுக்கு தங்குமிட வசதிகள் தேவைப்படும் போது அத்துருகிரிய மற்றும் பொகவந்தலாவ நிலையங்கள் இரண்டிலும் அத்தகைய வசதிகளை நிறுவனம் வழங்குகின்றது. வாடகைக்கு விடும் நடவடிக்கைகளில் இருந்து வருமானங்களை அதிகரிக்கும் பொருட்டு அதன் சேவையின் தரத்தினை மேலும் அதிகரிப்பதற்கு நிறுவனம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

**ஊழியர் நலன்கள்**

ஊழியர்களின் தொழில் வளர்ச்சியினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு முகாமைத்துவமானது சேவையினுள் தமது திறன்களையும் அறிவினையும் மேம்படுத்துவதற்கும் ஊழியர்கள் வேண்டப்படுகின்றவாறும் போதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளை வழங்குவதற்கும் அவர்களுக்கு வழிகாட்டுகின்றது. 2016ஆம் ஆண்டில் இருந்த நிறுவனசார் நலனோம்புகை நலத்திட்டங்களும் 2017ஆம் ஆண்டின்போதும் அதேபோன்று தொடர்ந்தது.

நிறுவனக் கட்டமைப்பு பக்கம் 16இல் தரப்பட்டுள்ளது.

## நிறுவனக்கட்டடமைப்பு



**நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடுகள்**

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கல்விசார் கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வோருக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கும் பெருந்தோட்ட நிறைவேற்று தகைமையுடைய அலுவலர்களுக்கு தொழில்சார் உறுப்புரிமையினை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒரேயொரு அரசாங்க நிறுவனமாகும். தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு, மரமுந்திரகை, கறுவா மற்றும் பனை போன்ற பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள சிறு உடமையாளர் துறை உள்ளடங்கலாக பெருந்தோட்டக் கைத்தொழிலில் பணியாற்றுகின்றவர்களின் தொழில்சார் தகைமைகளின் உயர் தரநியமத்தினை பேணுவதனை இது உறுதி செய்கின்றது.

நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதனை இலக்காக கொண்ட நிறுவனத்தின் முதன்மை நடவடிக்கைகள், கீழே அட்டவணைப்படுத்தப்பட்டவாறு 7 முக்கிய விடயப்பரப்புகளாக விகைப்படுத்தப்பட்டுள்ளன.

**(அ) கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்**

பங்கேற்பாளர்களின் கல்வித் தகமைகளை தரமுயர்த்துவதற்கும், அவர்களின் ஆற்றல்களை அதிகரிப்பதற்குமாக கல்விசார் கற்கைநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக் கற்கைநெறிகளுக்காக சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு திருப்திகரமான கல்விசார் பதிவுகளை பேணுவதற்கு பங்கேற்பாளர்கள் வேண்டப்படுவதுடன் தாம் தொடர்கின்ற கற்கைநெறிகள் பாடத்தொகுப்புகளில் குறிப்பிடப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் வேண்டப்படுகின்றனர். பின்வரும் பாடநெறிகள் கல்விசார் வகுதியினுள் உள்ளடக்கப்படுகின்றன




- பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி பட்டம் (வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து)
- பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா
- பெருந்தோட்ட விரிவாக்க முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா
- பெருந்தோட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கைநெறி
- புத்தகம் பதியுநர் மற்றும் பெருந்தோட்ட கணக்கீடு சான்றிதழ் கற்கைநெறி
- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படை சான்றிதழ் கற்கைநெறி
- மனிதவள முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கைநெறி

ஆளணி முகாமைத்துவ நிறுவனத்துடன் இணைந்து

- தேயிலை தயாரித்தல் மற்றும் தேயிலைத் தொழிற்சாலை முகாமைத்துவத்தில் தேசிய சான்றிதழ் பரீட்சை

- பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் உயர் சான்றிதழ் கற்கைநெறி
- சமூக வலுவூட்டல் மற்றும் நுண்நிதியில் சான்றிதழ் கற்கைநெறி
- தேசிய தொழில் தகைமை நிகழ்ச்சித்திட்டங்கள்

(ஆ)**தொழில்சார் பாடநெறி**

தொழில்சார் கற்கை நெறிகளின் பிரதான குறிக்கோள் வேறுபட்ட விடயங்களில் கோட்பாடுகள், செயன்முறை அறிவு மற்றும் திறன்களை வளர்ப்பதாகும். பங்கேற்பாளர்களின் தொழில்வாய்ப்புகளுக்கு அணுகுவதற்கும் அதிகரிப்பதற்கும் ஏற்றவாறு இக்கற்கை நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தமது நிறுவனத்திற்கான அவர்களின் பெறுமதியினை அதிகரிப்பதற்கும்.

நிறுவனத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் பாடநெறிகள் பின்வருமாறு-

- தேயிலை தயாரித்தலும், தொழிற்சாலை செயன்முறைகளும்
- இறப்பர் தயாரித்தலும், தொழிற்சாலை செயன்முறைகளும்
- மொழித்திறன் பரீட்சை



**(இ) திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இவ்வகை நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்த தொழில் ஒன்றுக்கு நேரடியாக தொடர்புடைய திறன்களையும் கொள்ளளவினையும் அதிகரிப்பதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கடமைவிபரங்களுடன் தொடர்புடைய நவீன தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட முறைகளை பங்கபற்றுநருக்கு பிரபல்யப்படுத்தவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.





பின்வரும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவனம் நடாத்துகின்றது.

- செயலமர்வுகள், கருத்தரங்குகள், கட்டுரைத் தொகுப்புகள்.
- தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
- முகாமைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
- சிறு உடமையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்



(ஈ) பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வெளியீடுகள், (பெருந்தோட்ட முகாமைத்துவ சஞ்சிகை, செய்திக் கடிதம், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மாணவர் கையேடுகள், பாடப் புத்தகங்கள் மற்றும் ஏனைய பருவகால சஞ்சிகைகள்

(உ) பெருந்தோட்ட முகாமைத்துவ துறைக்கு ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல். அத்துடன் அரசாங்க.: தனியார் துறை நிறுவனங்களுக்காக ஊழியர்களை தெரிவு செய்தல் மற்றும் பதவி உயர்த்தலுக்கான நுண்ணறிவுப் பரீட்சைகளை நடாத்துதல் (வாய்மூல மற்றும் எழுத்துமூல பரீட்சைகள்)

(ஊ) தகைமையுடைய நிறைவேற்று அலுவலர்களுக்காக நிறுவனத்தின் தொழில்சார் உறுப்புரிமையினை வழங்குதல். (கௌரவ உறுப்புரிமை, இணை உறுப்பினர் மற்றும் மாணவ உறுப்பினர்)

(எ) வெளிவாரி நிறுவனங்கள் தமது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் தொடர்புடைய செயற்பாடுகளை நடாத்துவதற்கும் தேவையான வசதிகளை வழங்குதல். (உணவு, தங்குமிடம், விரிவுரை மண்டபங்கள் போன்றன).

## பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய முன்னேற்ற மீளாய்வு

நிறுவனமானது அடிப்படையில் இரண்டு வகைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது அதாவது நிறுவனத்துறைக்கான வருமானம் **உழைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்** மற்றும் அரசாங்க நிதியங்களை பயன்படுத்தி சிறு உடமையாளர் துறைக்கான இலவசமாக **கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்சித் திட்டங்கள்.**

**வருமானம் உழைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்**
2017 ஆம் ஆண்டின் போது நிறுவனத்துக்காக வருமானம் உழைக்கும் பொருட்டு பின்வரும் கல்விசார் மற்றும் தொழில்சார் நிகழ்ச்சித் திட்டங்களை நிறுவனம் ஆரம்பித்தது

**2017 இல் வருமானம் உழைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்**

| *இல* | *நிகழ்சித் திட்டங்களின வகை* | *நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை* | *ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தினதும் காலம்* | *பங்கேற்பவர்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| **01** | பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்போளோமா | 01 | 18 மாதங்கள | 16 |
| **02** | தேயிலை தயாரித்தல் மற்றும் தொழிற்சாலை நடைமுறைகளில் | 01 | 09 நாட்கள் | 19 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழில்சார் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| **03** | இறப்பர் தயாரித்தல் மற்றும் தொழிற்சாலை நடைமுறைகளில் தொழில்சார் நிகழ்ச்சித் திட்டம் | 01 | 07 நாட்கள் | 09 |
| **04** | பெருந்தோட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவத்தில் சான்றிழ் கற்கைநெறி | 01 | 14 மாதங்கள் | 13 |
| **05** | புத்தகம் பதிதல் மற்றும் பெருந்தோட்ட கணக்கீட்டில் சான்றிதழ் கற்கைநெறி | 01 | 12 மாதங்கள் | 20 |
| **06** | மொழித்திறன் | 01 | 02 நாட்கள் | 28 |
| **07** | மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படை சான்றிதழ் கற்கைநெறி | 01 | 04 மாதங்கள் | 21 |
| **08** | சமூக வலுவூட்டல் மற்றும் நுண்நிதியில் சான்றிதழ் கற்கைநெறி | 01 | 10 நாட்கள் | 13 |
| **09** | பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் உயர்தர சான்றிதழ் கற்கைநெறி - சிங்களம் மொழி மூலம் | 01 | 06 மாதங்கள் | 12 |
| **10** | பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் உயர்தர சான்றிதழ் கற்கைநெறி - ஆங்கில மொழி மூலம் | 01 | 06 மாதங்கள | 11 |
| **11** | தேயிலை சுவைத்தலும் தரப்படுத்தலும். | 01 | 03 நாட்கள் | 34 |
| **12** | பணியினை விரும்பிச் செய்யும் கலை | 04 | 01 நாள் | 188 |
| **13** | ஆக்கபூர்வமான தொடர்பாடல் | 03 | 01 நாள் | 102 |
| **14** | மாற்றத்தை முகாமை செய்வதன் மூலம் உற்பத்தி திறனை அதிகரித்தல் | 01 | 02 நாட்கள் | 21 |
| **15** | உற்பத்தி திறன் மற்றும் தர முகாமைத்துவ நுட்பங்கள் | 02 | 01 நாள் | 45 |
| **16** | தலைமைத்துவ அபிவிருத்தி திறன்கள் | 02 | 01 நாள் | 116 |
| **17** | தேயிலை தொழிற்சாலை அலுவலர்களுக்கான திறன் அபிவிருத்தி | 01 | 05 நாட்கள் | 22 |
| **18** | விசேட நிகழ்ச்சித் திட்டங்கள | 09 | 01 நாள் | 230 |
| | **மொத்தம்** | **33** | | **920** |

*அட்டவணை.01*

மேற்குறித்தவற்றுக்கு புறம்பாக கல்வி காலத்தினையும் பரீட்சைகளையும் நிறைவு செய்வதற்கு முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பின்வரும் தற்போது இடம்பெறும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவனம் தொடர்ந்தது.

**2016 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்த கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்**

| *இல* | *நிகழ்சித் திட்டங்களின் பெரும் வகையும்* | *நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை* | *ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தினதும் காலம்* | *பங்கேற்பவர்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| **01** | பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் | 01 | 03 வருடங்கள் | - |
| **02** | பெருந்தோட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவ சான்றிதழ் கற்றைநெறி | 01 | 14 மாதங்கள் | 11 |
| **03** | புத்தகம் பதித்தல் மற்றும் பெருந்தோட்ட கணக்கீட்டில் சான்றிதழ் கற்கைநெறி | 01 | 12 மாதங்கள் | 10 |
| | **மொத்தம்** | **03** | | **21** |

*அட்டவணை 02*

**வருமானம் உழைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னேற்றம் - 2017**

நடவடிக்கைத் திட்ட இலக்கான 48 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு எதிராக நிறுவனம் 33 வருமானம் உழைக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவு செய்தது. 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையின் முன்னேற்றம் 69% மாக அறிக்கையிடப்பட்டது. ஆண்டின் இறுதியில் நிறுவனம் எதிர்பார்க்கப்பட்ட பயிற்சி வருமானத்திற்கு எதிராக 64% நிதியியல் முன்னேற்றத்தினை அடையப்பெற்றது. 2017 ஆம் ஆண்டுக்கான பயிலுநர்களின் எண்ணிக்கை 917 திட்டமிடப்பட்ட இலக்கிலிருந்து பெருந்தோட்ட உழியர்களின் 920 பேரினை கொண்டிருந்தது. அதாவது இலக்கிற்கு எதிராக 100% ஆகும். 2017 ஆம் ஆண்டின் பௌதீக ரீதியாக மற்றும் நிதியியல் முன்னேற்றத்தின் விபரங்களை பின்வரும் அட்டவணை(இல 03) காண்பிக்கின்றது.

**பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம்**
**அட்டவணை 04**

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | மதிப்பீடு | | | உண்மையானவை | | | முன்னேற்றம் (வீதம்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நி.தி எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா மி) | நி.தி எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா மி). | நிகழ்ச்சித் திட்டங்கள் | மாணவர்கள் | வருமானம் (ரூபா மி) |
| **கல்விசார் மற்றும் தொழில்சார் நிகழ்ச்சித் திட்டங்கள்** | 10 | 160 | 5.92 | 8 | 139 | 2.603 | 80% | 87% | 44% |
| **திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | 5 | 75 | 1.35 | 1 | 22 | 0.540 | 20% | 29% | 40% |
| **தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | 2 | 30 | 0.63 | 1 | 34 | 0.408 | 50% | 113% | 65% |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்ஹ** | 21 | 460 | 8.75 | 9 | 230 | 2.675 | 43% | 50% | 31% |
| **முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | 7 | 140 | 0.63 | 12 | 472 | 2.865 | 171% | 337% | 455% |
| **பெருந்தோட்ட முகரமைத்துவத்தில் உயர் கற்கைநெறி** | 2 | 32 | 5.4 | 2 | 23 | 4.987 | 100% | 72% | 92% |
| **தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | 1 | 20 | 0.03 | 0 | 0 | 0 | 0% | 0% | 0% |
| **மொத்தம்** | 48 | 917 | 22.71 | 33 | 920 | 14.69 | | | |
| **வெளிவாரி பரீட்சைகள்** | | | 2.00 | | | 1.769 | | | 89% |
| **மொத்தம்** | 48 | 917 | 24.71 | 33 | 920 | 15.85 | 69% | 100% | 64% |

*அட்டவணை 03*




வபைடம் 01




வரைபடம் 02

## வருமானம் உழைக்கின்ற பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களின் இலாப நட்ட பகுப்பாய்வு

நிறுவனம் வருமானம் உழைக்கும்பொருட்டு, சிறிய கட்டணமொன்றினை அறவிடுவதன் மூலம் வேறுபட்ட வகையான கல்விசார், தொழில்சார் மற்றும் ஏனைய நிகழ்சித்திட்டங்களை நடாத்துகின்றது. 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 15.853 மில்லியன் கொண்ட மொத்த பயிற்சி வருமானம் மீது 56% வீத சாரசரி இலாப எல்லையுடன் பயிற்சி செயற்பாடுகளில் இருந்து ரூபா 8.942 மில்லியன் தேசிய வருமானம் ஒன்றினை அறிக்கையிட்டது. முன்னை ஆண்டின் புள்ளிவிபரங்களுக்கு அமைய ரூபா 12.787 மில்லியன் மொத்த பயிற்சி வருமானத்தில் இருந்து ரூபா 6.553 மில்லியன் தேறிய வருமானம் ஒன்றினை அறிக்கையிட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 2.389 மில்லியன் மூலம் தேறிய வருமானத்தை அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு வகையான கற்கைநெறிகளுக்குமான இலாப நட்ட பகுப்பாய்வு கீழே அட்டவணை இல் தரப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | வருமானம் (ரூபா. மில்) | செலவு (ரூபா. மில்) | இலாபம் / நட்டம் | இலாப எல்லை |
|---|---|---|---|---|
| **கல்விசார் மற்றும் தொழில்சார்** | 2.603 | 1.702 | 0.901 | 35% |
| **முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி** | 3.273 | 1.790 | 1.483 | 45% |
| **திறன் அபிவிருத்தி** | 0.540 | 0.110 | 0.430 | 80% |
| **பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் உயர் சான்றிதழ் கற்கைநெறி** | 4.987 | 1.334 | 3.653 | 73% |
| **விசேட பயிற்சி** | 2.681 | 0.675 | 2.006 | 75% |
| **வெளிவாரி பரீட்சைகளில் இருந்து வருமானம்** | 1.769 | 1.300 | 0.469 | 27% |
| **மொத்தம்** | 15.853 | 6.911 | 8.942 | 56% |

அட்டவணை4

**சிறு உடமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் - 2017**

சிறு உடமையாளர் துறையின் முக்கியத்துவத்தினையும், பெருந்தோட்டத் துறையில் சிறு உடமையாளர்களின் பங்களிப்பினையும், இத்துறையின் மனிதவள அபிவிருத்தியின் முக்கியத்தவத்தையும் நிறுவனம் இனங்கண்டுள்ளது. இச் செய்தியினை திறைசேரிக்கு எடுத்சென்று சிறு உடமையாளர்களுக்கான கொள்ளளவு அபிவிருத்தியின் கீழ் நிறுவனத்தின் வரவு செலவு திட்டத்தில் கணிசமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறு உரிமையார்களின் அறிவினை மேம்படுத்தவும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் 2017ஆம் ஆண்டில் ரூபா 9.0 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுடன் 228 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவனம் அட்டவனைப்படுத்தியிருந்தது. இவ் ஆண்டின் போது 7.8 மில்லியன் செலவில் சிறு உடமையாளர்களுக்காக நிறுவனம் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் சிறு உடமையாளர்களுக்கான நடாத்தப்பட்டன.

- மதுபான விலக்கு
- மனோபாவ விருத்தி
- முகாமைத்துவ அபிவிருத்தி
- தொழில் முயற்சி அபிவிருத்தி
- தொழில்நுட்ப தொழில் அபிவிருத்தி

சிறு உடமையாளர்களுக்கான நடாத்தப்பட்ட கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் பற்றிய விபரங்கள் கீழே அட்டவணை 5 இல் தரப்பட்டுள்ளன.

**சிறு உடமையாளர்களுக்கான நடாத்தப்பட்ட கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் பற்றிய விபரங்கள்**

| நிகழ்ச்சித் திட்டத்தின் வகை | எதிர்பார்க் கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | எதிர்பார்க் கப்பட்ட பங்குபற் றுநர்கள் | மதிப்பிடப்ப ட்ட செலவு (ரூபா/மில்) | நிகழ்ச்சித் திட்டங்களி ன் எண்ணிக் கை | பங்கேற் பாளர்க ளின் Particip ants | செலவு (ரூபா/மி ல்) |
|---|---|---|---|---|---|---|
| **இறப்பர் சிறு உடமையாளர்கள்** | 60 | 3,000 | 3.0 | 67 | 3272 | 2.24 |
| **தேயிலை சிறு உடமையாளர்கள்** | 50 | 2,500 | 2.5 | 58 | 3506 | 1.83 |
| **தெங்கு சிறு உடமையாளர்கள்** | 60 | 3,000 | 3.0 | 81 | 4356 | 2.78 |
| **ஏனைய பயிர்கள்** | 10 | 500 | 0.5 | 22 | 1504 | 0.95 |
| **அடையப்பட்ட மொத்தம்** | - | - | - | **228** | **12638** | **7.80** |
| **திட்டமிடப்பட்ட மொத்தம்** | **180** | **9,000** | **9.0** | - | - | - |
| **முன்னேற்றம்** | - | - | - | **127%** | **140%** | **87%** |

அட்டவணை5

 

2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதனை விட 127% முன்னேற்ற அறிக்கையிடுகின்ற 228 நிகழ்ச்சித்திட்டங்களை இவ்வருடத்தில் நடாத்தப்பட்டு இத்துறை கணிசமான முன்னேற்றத்தினை அடையப்பெற்றுள்ளதுடன் எதிர்பார்க்கப்பட்ட பயிலுனர்களின் எண்ணிகையில் 140% மேற்பட்ட முன்னேற்றத்தினை அறிக்கையிட்ட நிறுவனம் 12,638 சிறு உடமையாளர்களை பயிற்றுவிக்க கூடியதாக இருந்தது. இந்நிகழ்ச்சி திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகையானது 2017 இல் 7.8 மில்லியன் ஆகவிருந்தது. இது ஒதுக்கீடு செய்யப்பட நிதியத்தில் 87% நிதியியல் முன்னேற்றமாக இருந்தது.

**<u>தேசியத் தொழிற் தகைமையின் மட்டம் 4 இன்கீழ் பாடசாலையினை விட்டு விலகியோருக்கான திறமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.</u>**

துறைக்கு தகைமைபெற்ற புதியவர்களை ஆட்சேர்க்கின்ற தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு நிறுவனம் தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 கற்கைநெறிகளை வெற்றிகரமாக நடாத்தியது. தேசிய தொழிற் தகைமையானது தொழிலொன்றை செய்வதற்கு ஒருவருக்கு தேவைப்படுகின்ற தேர்ச்சிகள் மற்றும் அறிவினை அங்கீகரிக்கின்ற தொழில் அடிப்படையாக கொண்ட தகைமையாகும்.

தேசிய தொழிற் தகைமை கட்டமைப்பு அடிப்படையினைப் பின்பற்றி கீழே அட்டவணைப்படுத்தப்பட்டவாறு பெருந்தோட்டத் துறையின் தேவைகளுக்கு அமைவாக இரு தேசிய தொழிற்கல்வி மட்டம் 04 கற்கைநெறிகளை நிறுவனம் நடாத்தியது.

**தொழிற்சாலை அலுவலர்கள்**

- தேயிலை தயாரித்தலின் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவம் விடயங்கள் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.
- தொழிற்சாலை மட்டத்தில் தீர்மானமெடுத்தல் மற்றும் செலாற்றுகை கண்காணித்தல் என்பவற்றுக்கு பயன்படுத்தப்படும் தகவல்களுடன் மிகக்கடுமையாக தொழில்நுட்பமின்றி வினைத்திறனையும் செயல்திறனையும் மேம்படுத்துவதற்கு தொழிற்சாலை மற்றும் அலுவலக நடவடிக்கை பற்றிய அறிவினையும் புரிந்துணர்வினையும் அதிகரித்தல்.
- பயிலுநர் தேயிலை தொழிற்சாலை அலுவலர்களாக மிகப்பொருத்தமான அபேட்சகர்களை இனங்கண்டு தெரிவுசெய்வதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு உதவுதல்.

**கள உத்தியோகத்தர்கள்**

- தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 உடன் தகுதியான கள உத்தியோகத்தர்களை உருவாக்குவதற்காக பெருந்தோட்ட விவசாயத்துறை மீது கோட்பாடு ரீதியான, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ விடயங்களில் விவசாய நடைமுறைகள், தோட்ட முகாமைத்துவம் மற்றும் பயிற்சி வழங்குவதனை அறிமுகப்படுத்தல்.

- கள உத்தியோகத்தர்களாக மிகப்பொருத்தமான அபேட்சகர்களை இனங்கண்டு தெரிவுசெய்வதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு உதவுதல்.

நிறுவனமானது தேயிலை தொழிற்சாலை அலுவலர் மற்றும் தேயிலைத் தோட்ட அலுவலர் நிகழ்ச்சி திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்யக்கூடியதாகவிருந்ததுடன் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களும் தொழில் ஒன்றை தேடிக்கொள்ளக்கூடியதாகவிருந்தது. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் அடுத்த ஆண்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக 100 இற்கு மேற்பட்ட மாணவர்களை சேர்த்துக்கொள்ள திட்டமிட்டுள்ளது.

**கடந்த ஆண்டுக்கு எதிரான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்.**

கடந்த ஆண்டின் பயிற்சி புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடுகின்ற போது 2017 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை, பயிற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் ஈட்டப்பட்ட வருமானம் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டுன் ஒப்பிடுகையில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதில் 50% மும் வருமானம் உழைக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பாளர் அதிகரிப்பு 57% அறிக்கையிடப்பட்டிருந்தது. இது, 2017 இன் பயற்சி வருமானம் 2016 இற்கு எதிராக 24% இனால் அதிகரித்துள்ளது.

**2016 ஆண்டுக்கு எதிராக 2017 இன் முன்னேற்றம்**

| | 2016 | 2017 | அதிகரிப்பு/(குறைவு) சதவீதம் |
|---|---|---|---|
| **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை (வருமானம் உழைக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்)** | 22 | 33 | 50% |
| **பங்கேற்றவர்களின் எண்ணிக்கை (வருமானம் உழைக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்)** | 587 | 920 | 57% |
| **பயிற்சி வருமானம் (ரூபா மில்லியன்)** | 12.81 | 15.85 | 24% |
| **சிறு உடமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | 160 | 228 | 43% |
| **பயிற்றப்பட்ட சிறு உடமையாளர்களின் எண்ணிக்கை** | 10840 | 12638 | 17% |
| **சிறுஉடமையாளர்களுக்கான பயிற்சி மீது ஏற்பட்ட செலவு (ரூபா மில்லியன்)** | 7.18 | 7.80 | 9% |

அட்டவணை 6

**<u>ஏனைய நிறுவனங்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்</u>**

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் குறிக்கோள்களில் ஒன்று பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வேறுபட்ட விடயங்களில் ஆலோசனை சேவைகளை வழங்குவதாகும். தமது ஊழியர்களை பதவி உயர்த்துவதற்கும் தமது புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சைகளை நாடாத்துவதற்கும் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் வேறுபட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு அதாவது பெருந்தோட்ட துறையில் விசேடத்துவம் பெற்ற நிறுவனங்களுக்கு அத்தகைய சேவைகளை வழங்கி வருகின்றது. முன்னைய ஆண்டுகளில் அனுபவம் பெற்றதனைப் போன்று நிறுவனமானது 2017 ஆம் ஆண்டில் 22 பரீட்சைகளை நடாத்தி 1.765 மில்லியன் ரூபாயினை வருமானமாக ஈட்டியது.

**2017 இல் நடாத்தப்பட்ட பரீட்சைகள்**

| நிறுவனம் | பரீட்சைகளின் எண்ணிக்கை | அபேட்சவர்களின் எண்ணிக்கை | ஈட்டப்பட்ட வருமானம் ரூபா மில் |
|---|---|---|---|
| **இலங்கை தேயிலை சபை** | 18 | 821 | 1.139 |
| **தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகார சபை** | 03 | 191 | 0.497 |
| **தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்** | 01 | 16 | 0.129 |
| **மொத்தம்** | 22 | 1028 | 1.765 |

அட்டவணை 7

### பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானிப் பட்டம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் ஆலோசனையுடன் வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம், இரு நிறுவனங்களினதும் வளங்களைப் பயன்படுத்தி மற்றும் இலங்கையில் கிடைக்கப்பெறும் வேறுபட்ட கல்விசார், ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ நிறுவனங்களின் வளங்களைப்பெற்று விஞ்ஞானமானி மட்ட வெளிவாரி பட்ட கற்கைநெறியொன்றினை தயார்படுத்துவதற்கு 2000 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து அனுமதியினைப் பெற்றுக்கொண்டது.



கடந்த காலத்தில், பெருந்தோட்ட துறையில் முகாமைத்துவ அல்லது நிறைவேற்று மட்ட ஆளணியினரை கவருவதற்கு பட்டப்படிப்பு மட்டத்திற்கு அவர்களது கல்விப்பின்னணியினை தரமுயர்த்துவதற்கு இலங்கையில் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள் கற்கைநெறிகளை விருத்தி செய்திருக்கவில்லை. எனவே, பெருந்தோட்டத் துறையில் உள்ள சிரேஸ்ட மற்றும் நடுத்தர மட்ட முகாமையாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்களை இலக்காக கொண்டு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் பட்ட கற்கைநெறியொன்றை உருவாக்குவதற்கு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்துடன் இணைந்து உள்நாட்டு பல்கலைக்கழகமொன்று முன்வந்துள்ளமை இலங்கை வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும். அதற்கமைய, கடுமையான முயற்சியுடன், 2006 இல் பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானிப்பட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இது 3 வருட கற்கைநெறி ஒன்றாவதுடன் தொலைக்கல்வி கற்றல் பாட நெறியாகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

### இந் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு

அ. முன்னேற்றகரமான விளைச்சல் உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ நோக்குகள் (எண்ணக்கருசார்ந்த மற்றும் கோட்பாட்டுநிதியான) உயர் மட்ட அறிவியல் பின்னணியினை வழங்குதல்.

ஆ. பெருந்தோட்டப் பயிர்கள், நுகர்வோர் நடத்தை மற்றும் சமூக போக்குகள் போன்றவற்றுக்கான தொழில்நுட்பம், வெளிவாரிச் சூழல் மற்றும் சந்தை மனப்பாங்கு தொடர்பில் உலகரீதியான மாற்றங்களை இனங்காண்பதற்கு பெருந்தோட்ட முகாமையாளர்கள் மற்றும் நிறைவேற்று அலுவலர்களுக்கு உதவுதல்.

இ. உற்பத்தி, தொழில்நுட்ப, சந்தை, தொழிலாளர், மற்றும் முகாமைத்துவ பிரச்சினைகளை நுண்பாக மற்றும் பேரண்ட அடிப்படையில் ஆய்வுசெய்யும் திறன்களை மேம்படுத்தல்.

இக் கற்கைநெறி, பெருந்தோட்ட முகாமைத்துவக் கம்பனிகள். தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகார சபை, இறப்பர் அபிவிருத்தி திணைக்களம், தேயிலைச் சபை, தெங்கு பயிர்ச்செய்கை சபை, பயிர் ஆராய்ச்சி நிறுவனம் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்),ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம், கமநலச் சேவைகள் திணைக்களம், மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மகாவலி அதிகாரசபை, வங்கிகள். மற்றும் நாட்டில் உள்ள ஏனைய தொடர்புடைய ஏனைய நிறுவவனங்கள் போன்றவற்றிலிருந்து அலுவலர்கள் அடிப்படையில் இலக்காக கொள்ளப்படுகின்றனர்.

**பதிவுசெய்த மற்றும் சித்தியடைந்த மாணவர்கள் பற்றிய விபரங்கள்**

அட்டவணை 8

| *தொடர் இல* | *பிரிவு ஆண்டு* | *பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை* | *சித்தியடைந்த மாவணர்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| **1.** | 2006 | 21 | 16 |
| **2.** | 2007 | 17 | 11 |
| **3.** | 2008 | 35 | 21 |
| **4.** | 2009 | 34 | 16 |
| **5.** | 2010 | 47 | 29 |
| **6.** | 2011 | 32 | 17 |
| **7.** | 2012 | 54 | 37 |
| **8.** | 2013 | 81 | - |
| **9.** | 2014 | 91 | 52 |
| **10.** | 2015 | 105 | 17 |
| **11.** | 2016 | 121 | 37<br>33 |
| **12.** | 2017 | 117 | 48 |
| **13.** | 2018 | 143 | - |

## ஏனைய நிறுவனங்களுடனான கூட்டிணைப்புகள்

### உள்நாடு

பெருந்தோட்ட துறைக்காக மனிதவள முகாமைத்துவத்தில் இயைந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் பொருட்டு தேசிய பெருந்தோட்ட நிறுவனம் ஆளணி முகாமைத்து நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை கைச்சாத்திட்டுள்ளது. இது, 2017 சனவரியில் கைச்சாத்திடப்பட்டதுடன் 2017 இல் 21 ஆம் பிரிவுக்காக மனிதவள முகாமைத்துவ அடிப்படை கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.

### வெளிநாடு

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் குழுவொன்று தாய்லாந்தின் சியம் பல்கலைக்கழகத்திற்கும் தாய்லாந்தில் உள்ள இரு முன்னனி எண்ணெய் மர விதையிடல் மற்றும் பதப்படுத்தல் கம்பனிகளுக்கும் விஜயம் செய்தது. இவ்விஜயத்தின் பிரதான குறிக்கோள், பட்டபடிப்பபின் மட்ட கற்கைநெறிகள், குறுகிய கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை கூட்டிணைந்து நடாத்துவதற்கான சாத்தியத்தினை கலந்துரையாடுவதற்கம் ஆய்வுசெய்வதற்குமாகும்.





**நிறுவனத்தின் தொழில்சார் உறுப்புரிமை**

1987 இன் 5 ஆம் இலக்க சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மூலப்பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகளை அடிப்படையாக கொண்டு தகுதியுடைய பெருந்தோட்ட அலுவலர்களுக்கு நிறுவனம் தொழில்சார் உறுப்புரிமைகளை வழங்குகின்றது. மீளாய்வுக்குட்படும் ஆண்டின்போது மாணவ உறுப்பினரொருவர் இணை உறுப்பிரொருவராக பதவியுயர்த்தப்பட்டுள்ளதுடன் 6 நிறைவேற்றலுவலரொருவருக்கு கூட்டு உறுப்புரிமை வழங்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு வகுதியின் கீழ் வழங்கபட்ட உறுப்புரிமைகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு.



**அட்டவணை 9**

| கௌரவ உறுப்புரிமை | **20** |
|---|---|
| **கூட்டு உறுப்புரிமை** | 219 |
| **இணை உறுப்புரிமை** | 16 |
| **மாணவ உறுப்புரிமை** | 02 |
| **மொத்தம்** | **257** |

2017 ஆண்டின்போது நிறுவனம், பெருந்தோட்ட துறையில் தற்காலப் போக்குகளை இற்றைப்படுத்துவதற்கும் உறுப்பினர்கள் மத்தியில் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கும் பெருந்தோட்டங்கள் மீதான போக்குகள் பற்றிய விழிப்பணர்வு செயலமர்வோன்று ஏற்பாடு செய்யபப்ட்டு நடாத்தப்பட்டதுடன். இது 2017 ஜுலையில் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் 53 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடுகள்**




நிறுவனமானது 2015 இற்கு முன்னர் இரண்டு சஞ்சிகைகளையும் நான்கு செய்திக் கடிதங்களையும் வெளியிட்டது. மேற்குறித்த இரண்டு வெளியீடுகளுக்கும் பதிலாக புதிய பதிப்பொன்றாக பிளான்டேசன் என்ற பெயரில் ஒரு சஞ்சிகையினை வெளியிடுவதற்கு நிறுவனம் தீர்மானித்தது. பயிர் ஆராய்ச்சி நிறுவனங்களின் அறிவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மற்றும் தொழில்சார் நடுநிலையாளர்கள், பெருந்தோட்ட சிறுஉடமையாளர்கள் மூலம் எழுதப்பட்ட பெருந்தோட்ட தொழிற்துறையுடன் தொடர்புபட்ட மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட பல்வேறு கட்டுரைகளை இது உள்ளடக்குகின்றது. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் கலாநிதி (திருமதி) பிரியதர்ஷனி செனவிரத்ன, வயம்ப பல்கலைக்கழகத்தின் திரு பி.ஏ.டி சமன்சிறி, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி கே.எச்.ஜி.எம்.பீ தர்மசேன, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பயிற்சி பிரதானி திருமதி எஸ்.என் லங்காதிலக, பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பயிற்சி விசேட நிபுணர் திருமதி ஆர்.என் லொகுஹெட்டி, மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பதவியினர் உதவியாளர் திரு. நேபால

போன்றோர்களை பதிப்பாசிரியர்கள் குழு உள்ளடக்கியிருந்தது. திரு. எஸ்.எம் ஜயந்த சஞ்சிகையின் பிரதம பதிப்பாசிரியராவார்

## கிடைக்கப்பெறும் வசதிகள்

- **நூலக வசதிகள்**



நிறுவனத்தின் நூலகமானது தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு, மரமுந்திரிகை, கணக்கியல் பொது முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், மூலோபாய முகாமைத்துவம், சாதகமாக சிந்தித்தல், நேர முகாமைத்துவம், உற்பத்தித்திறன், தொழிற்பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் அத்துடன் தர முகாமைத்துவம் போன்ற பெருந்தோட்டத்துறையுடன் தொடர்புபட்ட பல விடயங்களை உள்ளடக்கி 4000 இற்கும் மேற்பட்ட புத்தகங்களைக் கொண்டுள்ளது. இது கொடுத்துதவும் மற்றும் உசாத்துணைவு ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. நீண்ட கால கற்கை நெறிகளை தொடருகின்ற பங்கேற்பாளர்களும் நிறுவனத்தின் பதவியினரும் கொடுத்துதவுதல் பகுதியில் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவர்களாக காணப்படுகின்ற அதேவேளை குறுகிய கால கற்கை நெறிகளின் பங்கேற்பாளர்கள், நிறுவனத்தின் பதவியினர், நிறுவனத்தின் புறவளவாளர்கள், பிரதேச பாடசலை மாணவர்கள் மற்றும் வெளிவாரி வளவாளர்கள் போன்றோர் உசாத்துணைவு பிரிவைப் பயன்படுத்த முடியும்.

- **தங்குமிட வசதிகள்**



கல்விசார் மற்றும் பயிற்சி நிறுவனம் ஒன்றுக்காக வேண்டப்படும் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் நிறுவனம் போதியளவு கொண்டுள்ளது. இருந்தும் உள்நாட்டு மற்றும் சர்வதேச கல்வி அத்துடன் பயிற்சி தொடர்பில் சந்தையில் காணப்படும் போக்கிற்கு அமைய தரப்படுத்தலும் நவீனமயப்படுத்தலும் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது. அதுருகிரிய நிலையத்தில் காணப்படும் வசதிகள், ஒரே நேரத்தில் 200



பேருக்கு இடவசதியளிக்கக்கூடிய கேட்போர் கூடம் ஒன்றினையும் 3 விரிவுரை மண்டபங்களையும் 60 பேருக்கு தங்குமிட வசதியளிக்கக்கூடிய விடுதியொன்றினையும் கொண்டுள்ளது.






**பொகவன்தலாவ விடுதி**
**ரஞ்சன் விஜேரத்ன பெருந்தோட்ட பாடசாலை)**

பொகவன்தலாவ தெரேசியா தோட்டத்தில் அமையப்பெற்றுள்ள பொகவன்தலாவ விடுதி (ரஞ்சன் விஜேரத்ன பெருந்தோட்ட பாடசாலை மற்றுமொரு பயிற்சி நிலையமாகும். நவீன பயிற்சி வசதிகளை வழங்குவதற்காக இது நிச்சயமாக மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. ஒவ்வொன்றும் 50 சுமார் 60 பேருக்கு இடவசதியளிக்கக்கூடிய கேட்போர் கூடமும் சுமார் 100 பங்கேற்பாளர்களுக்கு இடவசதியளிக்கக்கூடியதுடன் 50 பேருக்கு இடவதியளிக்ககூடிய 02 நடுத்தர அளவிலான விரிவுரை மண்டபங்களும் கிடைக்கப்பெறுகின்றன.

பொகவனதலாவையில் காணப்படும் விடுதி ஒரேநேரத்தில் சுமார் 70 பேருக்கு தங்குமிட வசதிகளை வழங்கக்கூடியது. இது ஓரளவு பெரிய உணவருந்தும் மண்டபத்தினையும் 03 அலுவலக அறைகளையும், 600 புத்தகங்களுக்கு மேல் காணப்படுகின்ற சிறிய நூலகம் ஒன்றினையும் கொண்டுள்ளது. விடுதி முகாமையாளருக்கு பங்களா ஒன்று உள்ளது. இந்நிலையத்தில் விடுதி முகாமையாளர் மற்றும் அலுவலக உதவியாளுக்கு மேலதிகமாக வேறு நிரந்தர பணியாளர்கள் காணப்படவில்லை. எனவே பணிப்பாளரின் முன்னனுமதியுடன் பயிற்சி அமர்வுகளின் போது தேவையான பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டனர். தற்போது பயிற்சி நிகழ்ச்சிகளுக்காவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கொரிய பயிற்சிகளுக்காகவும் அனைத்து வசதிகளும் வழங்கப்படுகின்றது.




*வரைபடம் 03*

## எமது நடவடிக்கைகள்



**2017 இற்காக பணி தொடங்குதல்**

தலைவர், பணிப்பாளர், பிநிஅ மற்றும் தேபெதுநி பதவியினர் 2017 இற்கான தமது கடமையினை தேசிய கொடியின் முன் அரச பணி சத்தியபிரமானத்தினை பிரகடனம் செய்து தொடங்கினர்

**சிறு உடமையாளர் பெருதோட்டத்தின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட சான்று வழங்குதல் வைபவம் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ( SPEnDP).**

தலைமைத்துவ மற்றும் தொழில்முயற்சி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவுசெய்த SPEnDPபயன்பெறும் குடும்பங்களுக்கு சொந்தமான30 இளையோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.





**விருதுவழங்கல் வைபவம் 2017 மார்ச் 31 அன்று BMICHஇல் இடம்பெற்றது**

கௌரவ அமைச்சர் நவின் திசாநாயக பிரதம அதிதியாக கலந்துகொண்டார் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பலவேறு கல்வி கற்கைநெறிகளின் வெற்றியடைந்த பங்கேற்பாளர்களுக்கு 160 சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

**புது வருட கொண்டாட்டம்**
தேபெமுநி சிங்கள புதுவருட கொண்டாட்டம் பதவியினரின் குடும்ப அங்கத்தவர்களுடன் 2017 ஏப்ரலின் இடம்பெற





**டெங்கு தடுப்பு பிச்சாரம்**
பணிப்பாளர்/பிநிஅ கலாநிதி பிரசாத் தர்மசேன அவர்களின் வழிகாட்டலுடனும் ஊழியர்களின் ஆதரவுடனும் தேபெமுநி இல் டெங்கு தடுப்பு பிரசாரம் இடம்பெற்றது



**கண்டியில் கண்காட்சி**
பட்டப்படிப்பு அந்தஸ்த்தினை இலக்காக கொண்டு பெருந்தோட்ட தொழிலில் கால்பதிப்பதற்கு பாடசாலையிருந்து விலகியோருக்கான பொன்னான வாய்ப்பினை கண்டுபிடிப்பதற்காக தேபெமுநி கண்டி KCC இல்



**புத்தர் சிலை திறக்கும் வைபவம்**
தே.பெ.மு நிறுவனத்தில் புத்தர் சிலை திறக்கும் வைபவம் 2017.09.29 அன்று இடம்பெற்றது.

**கிரிகெட் போட்டி**
நிறுவனங்களுக்கிடையில் நட்பினை மேம்படுத்துவற்கு தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துடன் 2017 ஒக்டோபர் 22 அன்று கிரிகெட் போட்டி இடம்பெற்றது.



## ***<u>நிறுவன சமூகப் பொறுப்பு நிகழ்வுகள்</u>***



வருடாந்த பிரித் நிகழ்வு 2017 டிசம்பரில் நிறுவனத்தில் இடம்பெற்றது.



தேசிய பெருந்தோட்ட முகாமைத்தவ நிறுவனத்தினால் அத்துருகிரிய ஒறுவல வித்தியாலயத்திற்கு வெண்பலகைகள் பகிர்டந்தளிக்கப்படடன.

ஒறுவல முன்பள்ளியில் மூலிகைச் செடிகளை விநியோகித்து நடுகின்ற நிகழ்வில் பணிப்பாளர்/ பிநிஅ மற்றும் தேபெமுநி குழு பங்கேற்றது.





2017 மேயில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிறுவனத்தை சூழ வாழ்கின்ற மக்களுக்கு தன்னீர் போத்தல்கள் மற்றும் ஏனைய உலர் உணவுகள் விநியோகிக்கப்பட்டது.

***<u>நிதியியல் மீளாய்வு</u>***

**செயலாற்றுகை**

முன்னைய ஆண்டு ரூபாய் 101.828 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2017 இல் ரூபா 115.395 மில்லியன் மொத்த வருமானத்தினை நிறுவனம் அறிக்கையிட்டது இது முன்னைய ஆண்டுக்கு எதிராக 13.3% அதிகரிப்பாகும். இவ்வருமானத்திற்கு பிரதானமாக பங்களிப்பு செய்த காரணி, தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் அரசாங்கம் அளிப்பினால் செய்யப்பட பங்களிப்பாகும். இது ரூபா 59.874 மில்லியன் ஆகும். இதற்கு மேலதிகமாக பட்டம் வழங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் பெருந்தோட்ட துறை அபிவிருத்தியினை நோக்கிய பயிற்சி வசதிகளை தரமுயர்த்துகின்ற கருத்திட்டத்தின் கீழ் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிடமிருந்து ரூபா 15.3 மில்லியன் தொகையொன்று கிடைக்கப்பெற்றது. முன்னைய ஆண்டில் அனுபவம் பெற்றதைப்போன்று, நிறுவனமானது பொகவந்தலாவ மற்றும் அத்துருகிரிய ஆகிய இரு இடங்களிலும் கிடைக்கப்பெறும் தங்குமிட வசதிகளுக்கான அறைகள் காணப்படுவதனால் வெளிவாரி நிறுவனங்களுக்கு வசதிகளை வாடகைக்கு வழங்குவதிலிருந்து நிறுவனம் ஈட்டிய வருமானமானத்திற்கு கணிசமான வருமானம் கிடைக்கப்பெற்றிருந்தது. மொத்த மீண்டெழும் செலவினம், 2017 இல் ரூபா 107.119 மில்லியன் பதிவாகியது. 2017 நிதியாண்டின் இறுதியளவில் நிறுவனமானது ரூபா 20.533 மில்லியன் தேய்மானத்தின் பின்னர் ரூபா 8.276 மில்லியன் தேறிய மிகை ஒன்றினை அறிக்கையிட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட நிதியியல் செயலாற்றுகையின் சாராம்சம் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளது

| | 2017 | 2016 | வேறுபாடு | | முக்கிய காரணம் |
|---|---|---|---|---|---|
| அளிப்பும் அரசாங்கமும் | 59.874 | 71.65 | (16.43%) | | எதிர்பார்க்கப்பட்டவாறு ரூபா 10.126 மில்லியன் திறைசேரி மூலமன அளிப்பின் பற்றாக்குறை |
| | | | | | |
| பயிற்சி வருமானம் | 15.853 | 12.787 | 23.97% | | 2016 உடன் ஒப்பிடுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | எண்ணிக்கை அதிகரித்ததன் காரணம். |
| **வாடகை வருமானம் பொவந்தலாவ) மற்றும் (அத்துருகிரிய** | 10.983 | 14.232 | (22.82%) | | கொரிய பயற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான கேள்வியில் வீழ்ச்சி மற்றும் விடுதி வசதிகள் மட்டுப்பாடு மற்றும் குறைந்த தங்குமிட வசதிகள் என்பன காரணமாக குறைவடைந்தது. |
| **ஈட்டப்பட்ட மொத்த வருமானம்** | 40.221 | 30.178 | 33.27% | | கடன்கொடுநர் தீர்ப்பனவு விலக்களித்தல் மற்றும் 15.3 மில்லியன் கருத்திட்ட வருமானம் போன்ற ஏனைய வருமான தெிகரிப்பு காரணம். |
| **சம்பளம் கூலிகள் அத்துடன் நலன்களும்** | 38.796 | 32.571 | 19.1% | | அரச ஊழியர்களின் வருடாந்த சம்பள் அதிகரிப்பு மற்றும் 2017 இல் புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட வெற்றிடங்கள் காரணம். |
| **மொத்த மீண்டெடுலும் செலவீனம்** | 107.119 | 87.070 | 23.06 | | கொள்ளளவு அபிவிருத்தி பயிற்சி போன்ற சம்பளம் மற்றும் பயிற்சி செலவுகளின் காரணமாக அதிகரித்தது. |
| **தேய்மானம்** | 20.533 | 18.951 | 8.34% | | புதிய கொள்வனவின் காரணமாக அதிகரித்தது. |
| **மிகை** | 8.276 | 14.757 | (43.91%) | | திறைசேரி மூலதன அளிப்பில் பற்றாக்குறை மற்றும் ஊழியர்கள் மீதான அதிகரித்த செலவினம் காரணமாக. |

அட்டவணை 10

திரவத்தன்மை நிலைமை

நிறுவனத்தின் திரவத்தன்மை நிலையானது 2017 ஆம் ஆண்டின் 1.58 தடவைகள் சாதகமான விகிதாசாரத்தினை காட்டுகின்றது. எனினும், 2.04 தடவை கொண்ட முன்னைய ஆண்டு விகிதாசாரத்துடன் ஒப்பிடுகையில் சிறிய வீழ்ச்சியொன்றினை பதிவுசெய்துள்ளது. ரூபா 10.126 மில்லியனால் மூலதன அளிப்பு பற்றாக்குறையின் காரணமாக 2017 இல் ரூபா 5.953 மில்லியனால் நடைமுறைப்பொறுப்பில் அதிகரிப்பினை ஏற்படுத்தியது.

**மூலதன செலவினம்**

2017 ஆம் ஆண்டின் போது நிறுவனம் மூலதன செலவின வரவு செலவுத்திட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டவாறு நிலையான உருவச்சொத்துக்களுக்காக உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தினை முன்னெடுத்தது இதற்கு திறைசேரி ரூபா 30.00 மில்லியன் தொகையினை ஒதுக்கீடு செய்தது. எனினும், அரசாங்கம் எதிர்கொண்ட தடைகளின் காரணமாக, விடுவிக்கப்பட்ட தொகை ரூபா 19.874 மில்லியனாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2017 இல் மூலதன செலவினத்தின் மதீப்பீட்டினையும் உண்மை செயலாற்றுகையினையும் பின்வரும் அட்டவணை காண்பிக்கின்றது. உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் பயிற்சி வசதிகளை மேம்படுத்துவதற்கு மூலதன் அபிவிருத்தி கருத்திட்டத்தின் முதல் கட்டமாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து ரூபா 15.3 மில்லியன் தொகை கிடைக்கப்பெற்றது இதற்கு 2017-2020 காலத்திற்காக ரூபா 47.1 மில்லியன் நிறுவனத்தின் பங்களிப்பு உள்ளடங்கலாக ரூபா 264.00 மில்லியன் தொகை அனுமதிக்கப்பட்டது.

**மூலதனச் செலவினத்தின் திட்டமிடலும் உண்மைச் செயலாற்றுகையும் 2017 (ரூபா மில்லியன்)**

| மூலதனப் பொருட்கள் | திட்டமிடப்பட்டது | உண்மையானது | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மூலதனச் சொத்தின் திருத்தமும் புனரமைப்பும் | 14.16 | 12.66 | 89.3% |
| மூலதனச் சொத்துகளின் கையகப்படுத்தல் | 4.34 | 3.63 | 83.6% |
| ஏனைய முதலீடுகள் | 1.20 | 0.151 | 12.5% |
| கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 12.05 | 10.18 | 84.5% |
| மொத்தம் | 31.75 | 26.62 | 83.8% |

அட்டவணை 11

பிரதான மூலதன அபிவிருத்தி செயற்பாடுகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ன.

- பொகவந்தலாவ அலுவலக கட்டடம் மற்றும் அத்துருகிரிய பிராதான கட்டடத்தொகுதி புனரமைத்தல்
- விரிவுரை அறைகளுக்கு வாயுச்சீராக்கி பொருத்ததல்
- சிறு உடமையாளர்களுக்காக 230 கொள்ளளவு அபிவிருத்தி பயற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- கொள்ளளவு அபிவிருத்தியின் கீழ் பாடசாலை விட்டு விலகியோருக்கான 2 தேசிய தொழில்தகைமை மட்டம் -4 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- அத்துருகிரிய விடுதிக்கூரை மற்றும் விடுதிக்கட்டடம் புனரமைப்பு
- பொகவந்தலாவைக்கான தளபாடக் கொள்வனவு
- தெனியாய பயிற்சி நிலையத்திற்கான தளபாடம் மற்றும் உபகரணக் கொள்வனவு

**விசேட அபிவிருத்திக் கருத்திட்டம்**

2017 ஆம் ஆண்டில் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றிற்கு அமைவாக பெருந்தோட்டத் துறையில் பயிற்சி வசதிகளை தரமுயர்த்துவதற்காக விசேட கருத்திட்டத்தினை தேசிய திட்டமிடல் திணைக்களம் பரிந்துரைத்ததை அமைச்சரவை அனுமதித்தது. இக் கருத்திட்டம் 2020 இன் இறுதி வரை செயற்படுத்தப்படும். மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 314.00 மில்லியனாகவிருக்கும் இது 216.9 மில்லியன் மூலதனக்கூறு மற்றும் ரூபா 50.00 மில்லியன் மீண்டெழும் செலவினம் ஆகியவற்றை உள்ளடக்கும். பொதுத்திறைசேரி ரூபா 216.9 மில்லியன் பங்களிப்புச் செய்யும் என்பதுடன் இலங்கை இராணுவத்தின் மூலம் கையகப்படத்தப்பட்ட காணியிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானமூடாக ரூபா 47.1 மில்லியன் பங்களிப்பதற்கு திட்டமிடுகின்றது.

2017 இல் தேசிய தொழில் தகைமை மட்டம் 06 வரை பாடவிதானம் விருத்தி செய்வதற்கு மேற்குறித்த கருத்திட்டத்திற்கென ரூபா 15.3 மில்லியன் பயன்படுத்தப்படும். இக்கருத்திட்டத்திற்கான நிதியியல் திட்டம் பின்வருமாறு

| அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான மூலதனச் செலவினம் (ரூபா மில்லியன்) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பட்டம் வழங்கும் நிறுவனமாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனப் பயிற்சி வசதிகளை தரமுயர்த்தல்.** | | *2017* | *2017.12.31 வரை செலவினம்* | *2018* | 2019 | 2020 | அ.நி | பொ.நி | மொத்தம் |
| **கருத்திட்டத்திற்கான மொத்த செலவினம்** | | | | | | | | | |
| | | | | | | | | | |
| **கருத்திட்ட மூலதனச் செலவினம்** | | | | | | | | | |
| 2001 | விடுதி வசதிகளை மேம்படுத்தல் | *11.7* | *11.7* | *2.0* | | | 11.7 | 2.0 | 13.7 |
| 2104 | புதிய கட்டடம், விரிவுரை மண்டபம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகினை தாபித்தல் | *0.6* | *0.6* | *59.0* | 137.6 | 45.1 | 197.2 | 45.1 | 242.3 |
| 2507 | கற்கைநெறிப் பாடக்கூறுகளை உருவாக்குதல் | *3.0* | *3.0* | *1.0* | 4.0 | | 8.0 | | 8.0 |
| | **மொத்த கருத்திட்ட மூலதனச் செலவு** | ***15.3*** | ***15.3*** | ***62.0*** | ***141.6*** | ***45.1*** | 216.9 | 47.1 | 264.0 |
| | **மொத்த கருத்திட்ட செலவு (ரூபா மில்லியன்)** | | | | | | | | **314.0** |
| | 2017 இல் ஒதுக்கீடுசெய்யப்பட்டது. | | | | | | | | **15.3** |
| | 2018 இற்கான வரவுசெலவுத்திட்டம்- அநி | | | | | | | | *60.0* |
| | 2019 இற்கான வரவுசெலவுத்திட்டம்- அநி | | | | | | | | *141.6* |
| | உருவாக்கப்பட்ட வருமானம் - (2018- ரூபா 2.00 மில்லியன் , 2020- ரூபா 45.1 மில்லியன் ) | | | | | | | | *47.1* |
| | **மொத்த மூலதனம்** | | | | | | | | ***264.0*** |
| | **மீண்டெழும் செலவினம்- அநி** | | | | | | | | ***50.0*** |

அட்டவணை 12

**பற்றாக்குறை/மிகை**

மீளாய்வு ஆண்டில் நிறுவனம், ரூபா 20.533 மில்லியன் கொண்ட தேய்மானத்தினைக் கழித்த பின்னர் ரூபா. 8.276 மில்லியன் கொண்ட மிகையொன்றினை அறிக்கையிட்டது. 2016 ஆம் ஆண்டில் நிதியியல் செயலாற்றுகைக் கூற்றில் ரூபா. 14.757 மில்லியன் அறிக்கையிடப்பட்டிருந்தது. பின்வரும் வரைபடம் 2009-2017 காலத்தின்போதான மிகை மற்றும் பற்றாக்குறை போக்குகளைக் காண்பிக்கின்றது.




*வரைபடம் 04*

தேறிய சொத்துகள்

2016 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு நிறுவனத்தின் தேறி சொத்துகள் ரூபா 232.817 மில்லியன் அக அதிகரித்து முன்னைய ஆண்டின் ரூபா. 203.830 மில்லியன் தொகையினை விட 14.22% அதிகாரிப்பினைக் காண்பிக்கின்றது. இவ்வதிகரிப்புக்கு காரணம், 2017 இல் அறிக்கையிப்பட்ட வாகனங்களின் மீள்விலைமதிப்பீட்டு பெறுகையும் மிகையுமாகும்.




*வரைபடம் 05*

**நிதியியல் நிலைமை**

நிதி நிலைமைக் கூற்றானது முன்னைய ஆண்டின் ரூபா 203.880 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 2017.12.31 அன்று உள்ளவாறு ரூபா 232.812 மில்லியன் கொண்ட தேறிய சொத்தனைக் காண்பித்தது. நிதியியல் கூற்றுகளுக்கமைய, மொத்த சொத்துகளின் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூபா 228.849 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் ரூபா 263.470 மில்லியன் ஆக பதிவாகியது. ஆண்டின் இறுதியில் உள்ளவாறு, மொத்த பொறுப்புகள், ரூபா 24.969 மில்லியன் கொண்ட முந்திய ஆண்டின் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 30.658 மில்லியன் ஆக விருந்தது. நிறுவனமானது ஊழியர் நலன்களுக்காக ரூபா 7.581 மில்லியன் ஏற்பாடு செய்து ஊழியர் நலனுக்கான கடப்பாடுகளை காப்பிடுவதற்கு நிலையான வைப்பில் முதலிட்டுள்ளது. 2017.12.31 அன்று

உள்ளவாறு மொத்த நடைமுறைச் சொத்து ரூபா 36.317 மில்லியன் ஆக பதிவாகியதுடன் நடைமுறைப்பொறுப்பு ரூபா 23.330 மில்லியன் ஆகவிருந்தது.

## நிறுவனம் எதிர்கொண்ட தடைகள்

2004 இல் மீள்கட்டமைப்பு செயன்முறை நிகழ்ந்ததன் பின்னர் முன்னைய ஆண்டுகளில் அனுபவம் பெற்றதனைப் போன்று நிறுவனமானது 2017 ஆம் ஆண்டிலும் பல தடைகளை எதிர்கொண்டது. பயிற்சிப் பீடத்தில் பதவியினர் பற்றாக்குறை மிக முக்கிய தடையொன்றாகவிருந்தது. பயிற்சி பீடத்தில் 6 உறுப்பினர்கள் மாத்திரம் காணப்பட்டனர். அனுமதிக்கப்பட்ட அலுவலர் வெற்றிடங்கள் காணப்பட்ட பேதிலும் தகைமைகள் மற்றும் திறன்களுக்கெதிரான சம்பள அளவுத்திடங்கள் போதாமையினால் நிறுவனம் அலுவலர்களை ஆட்சேர்க்க முடியாதிருந்தது. இலங்கை இராணுவத்தின் ஏழாவது பொறியியற் படையணி நான்கரை ஏக்கர் காணியினையும் மூன்று நிறைவேற்றத் தர அலுவலர் விடுதியினையும் பெற்றுக் கொண்டமையின் காரணமாக நிறுவனம் அலுவலர் விடுதிப் பற்றாக்குறையொன்றினை எதிர்கொண்டது.

அவர்களின் வரவின்மை தோட்டங்களின் உற்பத்தி மற்றும் நிருவாகச் செயற்பாடுகளில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடும் என்பதனால் பல பெருந்தோட்டக் கம்பனிகள் எமது வாரநாள் மற்றும் நீண்ட கால கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்கு வாரநாட்களில் தமது நிறைவேற்று அலுவலர்களை விடுவிப்பதற்கு தயக்கம் காட்டின. எனவே, நிறுவனம் பயிற்சி ஏற்பாடுகளை வார இறுதிக்கு மாற்றவேண்டியிருந்தது. இது. நிகழ்ச்சித் திட்டங்களை அதிகரிப்பதற்கு விரிவுரை மண்டபங்களையும் தங்குமிட வசதிகளினதும் கொள்ளளவினை மட்டுப்படுத்துவற்கு வழிவகுத்தது.

பெருந்தோட்டத் துறையானது இளந்தலைமுறையினருக்கு கவர்ச்சிகரமற்றது என்பதனால் பெருந்தோட்டப்பயிற்சிக்காக பாடசாலை விட்டு விலகியர்களின் பங்களிப்பு மிககுறைவைாகவிருந்தது. தகைமைக்குறைவின் காரணமாக பெருந்தோட்டக் கம்பனிகளினால் இலகுவில் ஆட்சேர்க்க முடியாதிருந்துவருகின்ற தெரிவு செய்யப்பட்ட தொழில்களை மாற்றுவதற்கான பாடத் தொகுதிகளை உருவாக்குவதற்கு நிறுவனம் அதிக நிதியினை முதலிடவேண்டியிருந்தது. பாடத் தொகுதிகளை உருவாக்குவதற்காக ஆலோசகர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அரசாங்க கேள்வி நடைமுறைகள் மீது நிறுவனம் இடர்களை எதிர்கொண்டது.

அலுவலக கட்டிடத் தொகுதியானது 60 வருட பழைமை வாய்ந்த 1980 களில் அலுவலகமாக மாற்றப்பட்டதாகும். எனவே, இது திருத்த கட்டங்களைத் தாண்டி காணப்படுகின்றது. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு புதிய கட்டிட அலுவலகத் தொகுதி நிர்மாணிக்கப்படவேண்டியுள்ளது.

நிறுவனம் தற்போது கொண்டுள்ள 08 வாகனங்களில் 06 வாகனங்கள் 20 வருடம் பழைமை வாய்ந்தவையாகும். பெஜிரோ ஜீப் வாகனத்தின் வயது 25 வருடங்களுக்கும் அதிகமானதாகும். முன்னர் குறிப்பிட்டது போன்று சிறு உடமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நாட்டின் வேறுபட்ட பிராந்தியங்களில் நடாத்தப்படுகின்றன. அத்தகைய தூர இடங்களுக்கு பயணிப்பதற்கு தற்போது காணப்படுகின்ற வாகனங்கள் நிச்சயமாக பொருத்தமற்றவையாகும். சேவை நாடிகளுக்கு மிகவும் செயல்திறன்மிக்க சேவையினை உறுதிசெய்யும் பொருட்டு இவ்வாகனங்கள் அனைத்தும் புதிய வாகனங்களைக் கொண்டு மாற்றீடு செய்யப்படவேண்டும்.

மேலும், பிராந்தியங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகையில் முறையாக பொதியிட்டு கொண்டு செல்வதற்கு வசதி கிடைக்காவிடின் கட்புல செவிப்புல ஒளிப்பேழை உபகரணங்கள் சேதமடையும். ஆனால் தற்போது காணப்படுகின்ற வாகனங்கள் கட்புல செவிப்புல ஒளிப்பேழை உபகரணங்களை பாதுகாப்பாக

கொண்டுசெல்வதற்கு பொருத்தமற்றதாக காண்பபடுகின்றன. இதனால், நடமாடும் பயிற்சி அலகொன்றாக தயாரிப்பதற்கு பொருத்தமான வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. பெருந்தோட்டங்கள் அரசாங்கத்தின் உடமையாகவிருக்கின்ற போதிலும், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளில் உள்ள பெருந்தொட்ட அலுவலர்களுகாக தேவையான மற்றும் பதவியுயர்வு திட்டங்களுக்காக குறித்துரைத்த தகைமைகள் காணப்படாமை நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைக் கவருவதற்கு இடர்களை ஏற்படுத்தகின்றது.

**எதிர்காலத் திட்டம்**

2020 அளவில் பெருந்தோட்டதுறைக்கான பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக உருவாக்கப்படும் நோக்குடன் நிறுவனமானது தேசிய தொழிற்தகைமை கற்கைநெறி 7 இனை விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் கற்கைநெறி பாடத் தொகுப்புகளை உருவாக்குவதற்கும் திறைசேரியினால் ரூபாய் 314 மில்லியன் கொண்ட முன்மொழிவொன்று ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்தவற்றுக்கு சமாந்தரமாக நிறுவனத்தினால் 200 நபர்களுக்கான விடுதி வசதிகளை வழங்குவதற்கான புதிய அபிவிருத்தி முன்மொழிவுவொன்று சமர்பிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுவதுடன் இது ரூபா 223 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. பட்டம் அளிக்கும் கருத்திட்டத்தினை ஆரம்பிக்கும் முகமாக 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 15.30மில்லியன் கொண்ட தொகையொன்று ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உரிய காலத்தில் வெற்றிகரமாக கருத்திட்டதினை நிறைவுசெய்வதற்கு 2018 ஆம் ஆண்டிற்காக கணிசமான நிதியினை நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

## முடிவுரை

பெருந்தோட்டத் துறைக்கான முதன்மை பயிற்சி கல்வி நிறுவனமாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் தற்காலப் போக்குகளை மனதிற்கொண்டுள்ளதுடன் சமகாலத் தேவைகளுக்கு ஏற்ப எமது உற்பத்திகளை தரமுயர்த்தப்படுகின்றன. 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கு ஒப்பிடுகின்ற ஆண்டின் போது நிறுவனமானது நிதியியல் ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் அனுகூலங்களை அடைந்துள்ளது. இறப்பர் தேயிலை போன்ற பெருந்தோட்டப் பயிர்களின் விலைகளின் வீழ்ச்சியின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிறுவனங்கள் மற்றும் சிறு உடமைத்துறை ஆகிய இரண்டிலும் 2017 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக ரீதியான எண்ணிக்கை மோசமாக பாதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அலுவலர் கொள்ளளவு வலுப்படுத்தப்படுமாயின் சிறு உடமையாளர்களுக்கும் தோட்டப்பணியாளர்களுக்கும் அதிகமான செயல்திட்டத்தை நடாத்துவதற்கான சாத்தியங்கள் காணப்பட்டன.

2017 ஆம் ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் இரண்டிற்கும் இடையில் ரூபா 8.276 மில்லியன் கொண்ட மிகை ஒன்று காணப்பட்டதுடன் நிறுவனத்தின் தேறிய சொத்துகள் 2016 ஆம் ஆண்டில் ரூபா 203.88 மில்லியனில் இருந்து ரூபாய் 232.812 மில்லியன் வரை அதிகரித்துள்ளது.

பெருந்தோட்டத்துறையின் திறன் அபிவிருத்திக்கு மிக அத்தியவசியமாக திகழும் தேசிய தொழிற்தகமை ஒப்புதல் அளிப்பினை பெற்றுக்கொள்வதற்கு நிறுவனம் பாடத்தொகுப்பு அபிவிருத்தி செயன்முறையினை ஆரம்பிக்கக்கூடியதாக இருந்தது. நிறுவனமானது திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியங்களைப் பயன்படுத்தி ரூபா 10.012 மில்லியன் தொகையினை செலவிட்டு சிறு உடமையாளர்களுக்காக 228 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. அடுத்த ஆண்டிலும் கூட சிறு உடமையாளர்களுக்கும் தோட்டத்தொழிலார்களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு அதிக அவதானம் செலுத்தப்பட்டும். இத்தகவல்களின் அடிப்படையில் மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் போது பௌதீக ரீதியான மற்றும் நிதியியல் ரீதியான முன்னேற்றம் திருப்தியடையக்கூடியாதாக உள்ளதுடன் ஊழியர்களின் முயற்சி மற்றும் அர்பணிப்பு அத்துடன் ஆளுநர் சபை மற்றும் நிரல் அமைச்சு ஆகியவற்றின் முறையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் கீழ் 2018 ஆண்டில் திட்டமிடப்பட்ட இலக்குகளை நிறுவனம் எய்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் செயற்பாடுகளில் இலாபத்தினை அடைவதில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய ஒவ்வொருவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்வதற்கு நிறுவனத்தின் தலைவரும், பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகின்றனர்

**ஒப்பம்**
**தீப்தி அசோக அபேயவிக்ரம**
**தவிசாளர்/ தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**
**2018.05.15**

# 2017

# நிதியியல் கூற்றுகள்

**நிதியியல் அறிக்கை பக்கம்**


| | |
|---|---|
| குறிப்புகளும் கணக்கீட்டு கொள்கைகளும் | 2- 9 |
| குறிப்புகளும் கணக்கீட்டு கொள்கைகளும் | 10 -11 |
| நிதிச் செயலாற்றுகை கூற்று | 12 |
| பங்குமூலதன / தேறிய சொத்துகள் மாற்றக் கூற்று | 13 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 14 -15 |
| திட்டமிடப்பட்ட செயலாற்றுகையும் உண்மையான செயலாற்றுகையும் | 16 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 17 -18 |
| அருவச் சொத்துகளின் அட்டவணை | 19 |
| குறிப்புகளும் அட்டவணைகளும் | 20 -35 |
| துறைசார் அறிக்கை | 36 |
| நிதியியல் சிறப்பு கூறுகள் | 37- 38 |
| கணக்காய்வாளரின் அறிக்கை | 39 - 47 |

## தேசிய பொருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

2017 ஆம் ஆண்டிற்கான கணக்கீட்டு கொள்கைகளும், நிதிக் கணக்குகளுக்கான குறிப்புகளும்

### 1.0 *அறிக்கையிடும் நிறுவனம்*

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினை மிகவும் செயல்திறன்மிக்கதாகவும் அரசாங்கத்தின் உறுதியான நியதிச் சட்ட நிறுவனமாகவும் ஆக்கும் பொருட்டும் 1981 இன் 76ஆம் இலக்க சட்டம், 1987 இன் 5ஆம் இலக்க சட்டம் மற்றும் 2003 இன் 38ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்ட 1979 இன் 45ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிதிச் சட்ட சபையொன்றாகும்.

சட்டதிற்கும் திருத்தங்களுக்கும் அமைவாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/கல்விசார் கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வோருக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கும் பெருந்தோட்ட நிறைவேற்று தகைமையுடை அலுவலர்களுக்கு தொழில்சார் உரிப்புரிமையினை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒரேயொரு அரசாங்க நிறுவனமாகும். தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு, மரமுந்திரிகை, கறுவா மற்றும் பனை போன்ற பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள சிறு உடமையாளர் துறை உள்ளடங்கலாக பெருந்தோட்டக் கைத்தொழிலில் பணியாற்றுகின்றவர்களின் தொழில்சார் தகைமைகளின் உயர் தரநியமத்தினை பேணுவதனை இது உறுதி செய்கின்றது. இக்குறிக்கோள்களை அடைவதற்காக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமனாது பல்வேறு கருத்தரங்குகள், செயலமர்வுகள், பரீட்சைகளை நடாத்துவதுடன் அரசாங்க, தனியார் நிறுவனங்களுக்கும் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட பட்டபடிப்பு கற்கைநெறிகளையும் நிறுவனம் நடாத்துகின்றது. வெளிநாட்டு மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான கொள்ளளவினையும் இது கொண்டுள்ளது.

நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அத்துருகிரியவின் எம்.டி.எச் ஜயவரத்தன மாவத்தையில் அமைந்துள்ளது.

### 2.0 *தயாரித்தல் அடிப்படை*

2.1 இணங்குவித்தல் கூற்று

நிறுவனத்தின் நிதியியல் கூற்றுகள், இலங்கை பொது நிதி கணக்காளர்களின் அமைப்பினால் அறிவிக்கப்பட்ட கணக்கீட்டின் சேருகின்ற அடிப்படையில் ***இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு*** அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள நிதி நிலைக்கூற்று, நிதியியல் செயலாற்றுகை கூற்று, பங்குமூலதன மாற்றக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, வரவுசெலவுக் கூற்று மற்றும் உண்மைச் செலாற்றுகைக்கூற்று என்பவற்றுடன் சேர்த்து முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதியியல் கூற்றுகளுக்காகன குறிப்புகளையும் உள்ளடக்குகின்றன.

2.2 அளவீட்டு அடிப்படை

நிதியியல் கூற்றுகளில் உள்ள பின்வரும் முக்கிய விடயங்களுக்காகவை தவிர நிதியியல் கூற்றுகள் வரலாற்று கிரய மாற்ற அடிப்படைக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன

- வாகனங்கள் மீள் விலைமதிப்பீட்டு அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணகங்கள் 2014 இல் மீள்விலைமதிப்பீடு செய்யப்பட்டு 2014 இன் நிதியியல் கூற்றுகளில் முதற் தடவை ஏற்பாக வெளிப்படுத்தப்பட்டன. செலவு மாதிரியானது அதனைத் தொடரும் வருடங்களின் மீது வருடாந்த அறிக்கையிடும் காலத்திற்காக ஏற்புடையதாகும்.

பொகவந்தலாவ பிராந்திய நிலையத்தில் உள்ள ஆதனங்கள் 2014.12.31 அன்று மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்டு 2015 இன் நிதியியல் கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டன.

- ஓய்வூதிய நலக்கடப்பாடு, கணிப்பீட்டு பெறுமதியினை அடிப்படையாக கொண்டு இனங்காணப்பட்டுள்ளது.

2.3 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயம்

இந்நிதியியல் கூற்றுகள் நிறுவனத்தின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமான இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**3.0** ***முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்***

நிதியியல் கூற்றுகள், ***தொடர்ந்து இயங்கும்*** எண்ணக்கருவின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காலப்பகுதி முழுவதும் கணக்கீட்டு கொள்கைகள் முரணின்றி பிரயோகிக்கப்பட்டுள்ளன. அரசாங்க அளிப்புகளில் இருந்தும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கல்விசார் கற்கை நெறிகள், ஆலோசனை பணிகளை பொறுப்பேற்றல், தொழில்சார் உறுப்புரிமை சந்தாக்கள், வெளியீடுகள் விற்பனை போன்றவற்றில் இருந்தும் ஈட்டப்பட்ட நியதியங்கள் கிடைக்கப்பெறுகின்றன. அவ்வாறு திரட்டப்பட்ட நிதியங்கள் அவசியப்படுகின்றபோதும் அவசியப்படதின்றவாறும் நிறுவனசார் பொறுப்புகளை நிறைவு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

நிதியியல் கூற்றுகள் தயாரிக்கையில் பிரயோகிக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் கீழே குறிக்கப்பட்டுள்ளன. வேறு வகையில் குறிப்பிட்டால் அன்றி இக் கொள்கைகள், எடுத்துரைக்கப்படும் அனைத்து ஆண்டுகளில் முரணின்றி பிரயோகிக்கப்படுகின்றன.

3.1 ***அருவச் சொத்துகள்***

வேறாக பெற்றுக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துகள், ஒன்றுதிரண்ட பெறுமதிக்குறைப்பு மற்றும் ஒன்றுதிரண்ட பெறுமதி இழப்பு செலவுகளை கழித்து அறிக்கையிடப்படுகின்றன. பெறுமதிக்குறைப்பானது அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட் காலம் மீது **நேர் நிரை அடிப்படை** ஒன்றில் விதிக்கப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட் காலங்களும் பெறுதிக்குறைப்பு முறையும் ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் மீளாயப்படுவதுடன் மதிப்பிடலுக்கான ஏதேனும் மாற்றங்களின் விளைவு, எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை ஒன்றில் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

***கணனி மென்பொருள்***

கணக்கீடு, சம்பளம் வழங்கல், பயிற்சி புள்ளிவிபரங்கள் மற்றும் வள முகாமைத்துவம் போன்றனவற்றுக்காக உருவாக்கப்பட்டுள்ள கணணி மென்பொருள், கணனியின் தொழிற்பாட்டு முறைமை ஒன்றின் பாகமாக இவை இல்லாமையினால் அருவச் சொத்துகளாக இனங்காணப்படுகின்றன. 4 வருடங்களின் பின்னர் இச்சொத்துகள் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்படுகின்றன.

***தொலைக் கற்கை பாடக் கூறுகள் தயாரித்தல் செலவு***

பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளேமாவிற்கான தொலை கற்கை நெறிகள் தயாரித்தல் செலவு, அருவச் சொத்தாக இனங்காணப்படுவதுடன் தயாரிக்கப்பட்ட பாடக் கூறுகளின் (எழுதப்பட்ட) பயன்பாட்டு ஆயுட்காலம் நான்கு வருடங்களாகும்.

***தேசிய தொழில் தகைமை தரத்திற்கு பாடநெறி உள்ளடக்கங்களை தயாரிப்பதற்கான செலவு***

தேசிய தொழில் தகைமை நியமத்திற்கு பாடநெறி உள்ளடக்கங்களை நிறுவனம் தயாரிக்கின்றது. பாட உள்ளடக்கங்கள் தயாரிப்பதற்கான செலவு அருவச் சொத்து செலவாக கருதப்படுகின்றது, இது நான்கு வருடங்களில் பதிவழிப்புச் செய்யப்படும்.

*அருவச் செத்துகளின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயட்காலம் பின்வருமாறு*

| *விபரம்* | *கணனி மொன்பொருள்* | *தொலை கற்கை பாடநெறி தயாரித்தல் செலவு* | *தேசிய தொழில் தகைமை நியமத்திற்கு பாடநெறி உள்ளடக்கங்களை தயாரிப்பதற்கான செலவு* |
|---|---|---|---|
| *பயன்பாட்டு ஆயுட்காலம்* | *04 வருடங்கள்* | *04 வருடங்கள்* | *04 வருடங்கள்* |

3.2 **சிறு உடமையாளர்கள் மற்றும் பாடசாலை விட்டு விலகியோருக்கான கொள்ளளவு அவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள்**

சிறு சிறு உடமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் அறிவினை அதிகரிப்பதற்கும் வெளிப் பயிர் செய்கையாளருக்கான கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவனம் நடாத்துகின்றது. நிகழ்ச்சிதிட்டங்களின் செலவு நிறுவனத்தின் மூலதன அபிவிருத்தி செலவொன்றாக கருதப்படுகின்றது. நுகர்வோரின் கைகளில் உயர்தரம் வாய்ந்த இறுதி உற்பத்திகளை கிடைக்கச் செய்யும் நோக்குடன் விவசாய நடைமுறைகளின் எதிர்பார்கப்பட்ட மட்டங்களை அடைவதற்கு பயிர்ச் செய்கையாளர் மத்தியில் அறிவினை வழங்குவதற்கான அவசியமான தற்கால தேவையினையும் இது நிறைவுசெய்கின்றது.

இந் நிகழ்ச்சி திட்டங்கள் ஊடாக சிறு உடமையாளர்களின் முகாமைத்துவ திறன்கள், அறிவு மற்றும் உற்பத்திதிறன் மேம்படுத்தப்படும் அதேவேளை நிறுவனத்தின் நல்லெண்ணத்தினை அதிகரிப்பதற்கும் இயலச் செய்யும்.

இதற்கு மேலதிகமாக, பெருந்தோட்டத்துறையினை பற்றிக்கொள்வதற்கு விரும்புகின்ற இளம் தலைமுறையினரின் தகைமைகளை விருத்தி செய்வதற்காக தேசிய தொழிற் தகைமை கட்டமைப்பின் கீழ் பாடசாலையில் இருந்து விலகியோருக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவனம் நடாத்துகின்றது.

இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கம் ஒருவருடத்தினுள் உணரப்படும் என ஊகிக்கப்பட்டுள்ளது. எனவே. அத்தகைய முதலீகளின் பெறுமதி இவ் ஆண்டிலேயே பதிவழிப்புச் செய்யப்படும்.

2017 இல் 231 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி வெளிப்பயிர்ச் செய்கையாளர் மற்றும் அடிமட்ட தொழிலாளர்களின் பயிர்ச்செய்கை அறிவினை அதிகரிப்பதற்கும் பாடசாலை விட்டு விலகியோருக்கும் இரண்டு தேசிய தொழிற்தகைமை நிகழ்ச்சித் திட்டங்களும் தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் நிறுவனம் ரூ10.012 மில்லியன் செலவிட்டது.

3.3 **ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன ஒன்றுதிரண்ட பெறுமானத் தேய்வினை கழித்து வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வரலாற்றுக் கிரயமானது சொத்தொன்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கும் குறிப்பிடத்தக்க புதுப்பித்தலுக்கும் அதனை பணியாற்றும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க அனைத்து செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பாகம் வேறுபட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தினை கொண்டுள்ளபோது, அவை ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் வேறான வகைகளாக (பிரதான கூறு) கணக்கிடப்பட்டுள்ளன.

3.3.1 *பயன்பாட்டு ஆயுட் காலம்*

*கணக்கீட்டு நோக்கத்திற்காக சொத்தொன்றின் பயன்பாட்டு ஆயுட் காலத்தின் மிஞ்சிய பெறுமதியொன்றிற்கான காலத்தின் மீது அதனை பதிவழிப்புச் செய்வதற்கு மதிப்பிடப்பட்ட விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு நேர் நிரை முறையினைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகின்றது.*

*நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலங்களுக்காக பயன்படுத்தப்படும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட் காலம் மற்றும் பெறுமானத்தேய்வு வீதங்கள் பின்வருமாறு (விதிவிலக்குகளாக கீழுள்ள பந்திகளில் வேறுவகையில் குறிப்பிட்டலன்றி இவை பொதுவான விகிதங்களாகும்)*

| | | |
|---|---|---|
| *நிரந்தரக் கட்டிடங்கள்* | *20* **வருடங்கள்** | *5%* |
| *அலுவலக தளபாடம்* | *10* **வருடங்கள்** | *10%* |
| *மோட்டார் வாகனங்கள்* | *5* **வருடங்கள்** | *20%* |
| *உட்கட்டமைப்பு சொத்துகள்* | *10* **வருடங்கள்** | *10%* |
| *நூலகப் புத்தகங்கள்* | *10* **வருடங்கள்** | *10%* |

*விதிவிலக்குகள்*

- உபகரணத்தின் பெறுமதி பொறித்தொகுதி, இயந்திரம், அலுவலக உபகரணங்கள் மற்றும விரிப்பு துணிகள், கரண்டிப் பொருட்கள் போன்ற நாணாவித பொருட்களை உள்ளடக்குகின்றது. இப் பொருட்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டவாறு வேறுபட்ட ஆயட்காலத்தினைக் கொண்டன.

| | |
|---|---|
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 5 **வருடங்கள்** |
| அலுவலக உபகரணம் | 5 **வருடங்கள்** |
| கரண்டி பொருட்கள், விடுதி விரிப்பு துணிகள், | 4 **வருடங்கள்** |

- கனணிகள் வலையமைப்பு உட்கட்டமைப்புச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் கனணி வலையமைப்புக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் 5 வருடங்களாக இனங்காணப்படுகின்றது.
- 150 கி.வோ மின்பிறப்பாக்கியானது பொறித்தொகுதி மற்றும் இயந்திரமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பயன்பாட்டு ஆயுட்காலம் 10 வருடங்களாக இனங்காணப்பட்டுள்ளது.

- பின்வரும் சொத்துக்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கமைவாக உட்கட்டமைப்பு சொத்துகளாகக் கருதப்படுகின்றன.
  - *வீதித் திருத்தல்*
  - *நீர் மற்றும் மின்சார வளங்கள் அத்துடன் மின்பிறப்பாக்கும் முறைமைகள்*
  - *மின்சாரம் வழங்கல்*
  - *கனணி வலையமைப்பு*

***தேய்மான முறையும் பயன்பாட்டு ஆயுட்காலங்களும் அத்துடன் எஞ்சியுள்ள பெறுமதிகளும் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமாயின் சீராக்கப்படுகின்றது.***

**அளவீட்டு அடிப்படை**

அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களும் செலவு மாதிரிக்கமைவாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளதுடன் வாகனங்கள் மீள்விலைமதிப்பீட்டு மாதிரிக்கமைவாக கணக்கிடப்பட்டுள்ளன. நிறுவனத்தின் காணிக்கு பெறுமானத் தேய்வு விலைமதிக்கப்படவில்லை.

3.3.2 *விற்று அகற்றுதல்*

அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலத்தில் எவ்வித பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படாத போது அல்லது விற்று அகற்றப்படுகின்றபோது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமொன்றின் கொண்டு செல்லும் தொகை இனங்காணப்படுவதில்லை. விற்று அகற்றுதல் மீதான இலாபங்கள் அல்லது நட்டங்கள் விற்று அகற்றுதல் பெறுமதி மீது கொண்டுள்ள பெறுகைகளுடன் ஒப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. இவை, நிதியியல் செயலாற்றுகை கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

3.3.3 *வருடாந்த அளவீட்டு சபை*

ஒவ்வொரு வருட இறுதியிலும் நிறுவனம் வருடாந்த அளவீட்டு சபையினை நடாத்துவதுடன் பொருளாதார ரீதியாக குறைவாக பயனுள்ள பொருட்களை விற்று அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.

3.3.4 *இலங்கை இராணுவத்தினால் கையேற்க்கப்பட்ட காணியின் தற்போதைய நிலைமை*

*1.9499 ஹெ. பரப்புக்கொண்ட காணியும் மூன்று பதவிநிலை அலுவலர் விடுதிகளும் இலங்கை இராணுவத்தின் 7ஆம் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளன. மேற்குறித்த ஆதனங்களின் உரிமை காணி பெற்றுக்கொள்ளல் சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ரூ. 55.0 மில்லியன்கொண்ட நட்டஈடொன்று நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. கொடுக்கல்வாங்கல் செயன்முறையானது நிறுவனம் ஆதனங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுத்துள்ளதானால் நிறுத்தப்பட்டுள்ளது.*

## 4.0 *கட்டமைப்பு வசதிகளுக்கான வைப்புகள்*

*இதுசேவை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் உட்கட்டமைப்பு வசதிகளுக்கெதிராக பிணை வைப்புகள் கொடுப்பனவினை உள்ளடக்குகின்றது.*

## 5.0 பதிவேட்டுப் பொருட்கள்

*நிறுவனத்தின் வெளியீடுகள், அச்சுப் பொருட்கள், காகிதாதிகள் மற்றும் அலுவலக கோரிக்கைகள், டயர், கட்டட பராமரிப்பு பொருட்கள் மற்றும் ஏனைய நுகரத்தக்கவை என்பவற்றை பதிவேட்டுப் பொருட்கள் உள்ளடக்குகின்றன. முதல் வந்தது முதலில் வெளிச்செல்லல் என்ற கோட்பாட்டின் கீழ் கிரயத்தில் இவை மீள்விலை மதிப்பிடப்படுகின்றன. வெளியீட்டு இருப்பானது தேயிலை அபிவிருத்திக் கருத்திடத்திலிருந்து அன்பளிப்புச் செய்யப்பட்ட புத்தகங்களையும் உள்ளடக்குகின்றது.*

பயன்படுத்தப்பட்ட செலவுச் சூத்திரம்: ''கொள்வனவுச் செலவு, மாற்றல் செலவு, ஏனைய செலவு'' பதிவேட்டுப் பொருட்களின் கவனிப்புத் தொகை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது

| ***பொருள்*** | *சீர்மதிப்பு பெறுமதியில் கவனிப்புச் செலவு (ரூபா '000)* | *விற்பனைக்கான செலவு* | *சீர்மதிப்பு பெறுமதியில் கவனிப்புச் செலவு (ரூபா '000))* |
|---|---|---|---|
| காகிதாதிகள் | *327* | - | *327* |
| *அச்சுப்பொருட்கள்* | *697* | - | *697* |
| *நலநோம்புகைப் பொருட்கள்* | *41* | - | *41* |
| நுகரத்தக்க பொருட்கள் | *48* | - | *48* |

| | | | |
|---|---|---|---|
| கட்டிடங்கள் பாராமிப்பு பொருட்கள் | *57* | - | *57* |
| டயர், டியூப் | *31* | - | *31* |
| வெளியீடுகள் | *370* | | *370* |
| மொத்தம் | *1573* | - | *1573* |

அன்பளிப்புச் செய்யப்பட்ட வெளியீடுகள்
அன்பளிப்புச் செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதி, வெளியீட்டு இருப்பில் உள்ளடக்குவதுடன் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் பிற்போடப்பட்ட வருமான கணக்கில் காட்டப்பட்டுள்ளது. வருமானமானது அது தேறுகின்றவாறும் போதும் தொடர்புடைய கணக்கீட்டுக்காலத்திற்கு இனங்காணப்படுகின்றது.

## 6.0 காசும் காசுக்கு சமமானவையும்

கையிலுள்ள காசு, அதுருகிரிய இலங்கை வங்கிக் கிளையில் நடைமுறை கணக்கு நிலுவை மற்றும் 3 மாத காலப்பகுதியினை விட குறைந்த கால வைப்புகள் குறுகியகால என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## 7.0 நிதியியல் சாதனங்கள்

நிறுவனமானது கடன்களையும் வருமதிகளையும் மற்றும் வைப்புக்களை அவை தோற்றுவிக்கப்பட்ட திகதியில் ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. நிறுவனமானது சொத்து காலாவதியிலிருந்து காசுப்பாய்ச்சலுக்கு நிதியியல் சொத்துக்களை இனங்காண்கின்றது.

**முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள்**
